முகவுரை.

அநாதியாய் ஆரியர்களால் வசிக்கப்பெற்றுப் புண்ணிய பூமி என்னும் சிறப்புப் பெயர்வாய்ந்த நம் பாதநாட்டில் அறியாக்காலத் திருந்தே ப்ராம்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ர ரூபமான நான்கு வர்ணங்கள் எனப்படும் முக்கிய ஜாதிகள் ஏற்பட்டிருப்பதை அனைவரும் அறிவார்கள். இந் நான்கு வர்ணத்தவர்களில் ஒவ்வொரு வர்ணத்தவரும் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்களைச் சுருதி ஸ்ம்ருதிகள் விவரிக்கின்றன. வர்ணபேதங்களை யொட்டி தர்மங்கள் வேறுபடினும் எல்லா வர்ணத்தினரும் ஸமுதாய நன்மைக்காகவே அவ்வவ தர்மங்களை அனுஷ்டிக்க வேண்டுமாதலானும் ஒவ்வொரு வர்ணத்தவரும் அந்நன்மைக்கு இன்றியமையாதவர்களாய் இருத்தலானும் வர்ணங்களில் ஒன்று உயர்ந்தது மற்றொன்று தாழ்ந்தது என்னும் நினைவு பாமரர்களைத் தவிர ஏனைய அறிஞர்களால் ஆதரிக்கத்தக்கதல்ல. ஸமுதாய சரீரத்திற்கு எல்லா வர்ணங்களும் ஜாதிகளும் அவயவங்கள் போலும்.

நிற்க, கேவல வர்ணமும் ஜாதியும் அவரவர்களுடைய கடமைகளைக் காட்டுவதில் நோக்கை யுடையவையே யொழிய மேன்மைக்குக் காரணமாக மாட்டாவென்பது ஸகல சாஸ்திரங்களின் துணிவு. மேன்மையாவது மோக்ஷஸாம்ராஜ்யம் எனப்படும் பகவத்ப்ராப்தி. இதைக்காட்டிலும் நம்மால் கோரத்தகுந்த சாச்வதப் பேறு வேறில்லை அல்லவா. இம்மேன்மையைப் பெறுவதற்கு ஜாதி நியமம் இல்லை என்பது திண்ணம். இவ்வர்த்தத்தை உலகாசிரியர் என்னும் சிறப்புப் பெயரை அடைந்து பிரஸித்திபெற்ற அந்தணர் பின்வரும் கம்பீரோதார வாக்கியங்களால் வெளியிட்டிருக்கிறார். "ப்ராம்மணியம் விலை செல்லுகிறது வேதாத்யயநாதி முகத்தாலே பகவல்லாபஹேதுவென்று. அதுதானே இழவுக்குறுப்பாகில் த்யாஜ்யமாமிறே. ஜன்மவ்ருத்தங்களினுடைய உத்கர்ஷமும் அபகர்ஷமும்

பேற்றுக்கு யிழவுக்கும் அப்ரயோஜகம். ப்ரயோஜகம் பகவத் ஸம்பந்தமும் தத் அஸம்பந்தமும்" (ஸ்ரீ வசனபூஷணம்—சூ. 207–208). அதாவது :—ப்ராம்மண்யத்திற்கு எதனால் கௌரவம்? அதைப் பெற்றவன் அவனுடைய கடமையான வேதாத்தியயனத்தைப் பண்ணி, மீமாம்ஸா சாஸ்திரங்களால் வேத தாத்பர்யத்தை நிர்ணயித்து, பகவதுபாஸநாதிகளில் இழிந்து, பகவத் விஷயத்தைப் பெறக்கூடும் என்பதினாலல்லவா? அப்படி இல்லாமல் அந்தப் ப்ராம்மணியந்தானே ஜாதி அஹங்காரத்தை உண்டுபண்ணி பகவத் ஸம்பந்தமுடைய ஸாதுக்களின் நிந்தையில் மூட்டி அதனால் உண்டாகும் பாபத்தை விளைவிக்குமானால் அது வெறுக்கத்தக்கதல்லவா? ஜாதி வ்ருத்தம் இவைகளின் உயர்வோ தாழ்வோ பகவானைப் பெறுகைக்காவது இழக்கைக்காவது காரணமாகிறதில்லை. உயர்ந்த ஜாதி வ்ருத்தங்களை உடையவர்களிலும் சிலர் இழக்கிறார்கள், சிலரே பெறுகிறார்கள். அதுபோலவே தாழ்ந்த ஜாதி வ்ருத்தங்களை உடையவர்களிலும் இரண்டு வகையும் உண்டாகக் காண்கிறோம். ஆகையால் ஜாதி வ்ருத்தங்களின் உயர்வு தாழ்ச்சி இவ்விஷயத்தில் காரியகரமல்ல. பின்னை எது காரியகரம் என்றால், நாம் பகவத் தாஸர்கள் என்னும் ஞானத்துடன் பகவானிடத்திலும் அவனுடைய ஸம்பந்தமுடைய ஜீவாசிகளிடத்திலும் பூர்ணமான அன்பு பாராட்டி ஊழியம் செய்தல் பேற்றுக்கும் இதற்கு விரோதமான ஞானமும் செய்கையும் இழவுக்கும் காரணமாயிருக்கும் என்று. பேற்றுக்கு வேண்டிய உத்தம ஞானத்திற்கும் நடத்தைக்கும் ஜாதி முதலியவை அனுவசியம். அவைகளைப் பற்றுவதற்கு எல்லா மனிதர்களுக்கும் ஸமமான அதிகாரம் உண்டு.

இவ்வர்த்தத்திற்கும் இதுவும் தவிர இழிகுலத்தவர்களேனும் பகவானடியார்களாகில் உத்க்ருஷ்டவர்ணராய் நினைக்கப்படும் நான்மறையோர்களாலும் ஸாக்ஷாத் பகவானைப்போலவே பூஜிக்கத் தக்கவர்கள் என்பதற்கும் நம்முடைய சாஸ்திரங்களில் கணக்கில்லாப் ப்ரமாணங்களும் உதாஹரணங்களும் இருக்கின்றன. "பக்திரஷ்டவிதாஹ்யேஷா யஸ்மின் ம்லேச்சேபி வர்த்ததே। தஸ்மை தேயம் ததோக் க்ராஹ்யம்ஸச பூஜ்யோ யதாஹ்யஹம்". என்று

பக்வானே அருளிச்செய்திருக்கிறார். அதாவது :—(அறத்தாழ்ந்த) ம்லேச்சனும் (என்னுடைய பக்த ஜனங்கள் பக்கல் அன்பும், என்னுடைய ஆராதனத்தில் உகப்புந்தானே ஆராதிக்கையும், என் பக்கல் டம்பமற்றிருக்கையும், என் கதையைக் கேழ்குமிடத்தில் பக்தியும், பக்தி கார்யமான ஸ்வர நேத்ர அங்கங்களில் விகாரமும், என்னை எப்போதும் நினைக்கையும், என்னை இதரப்பிரயோஜனம் கொள்ளா தொழிகையும் ஆகிற) இந்த எட்டுவிதமான பக்தியை யுடையனானல், ஸர்வோத்க்ருஷ்டராய் உத்க்ருஷ்டவர்ணரான சதுர் வேதிகளாலும் அவர்களுக்குண்டாகக்கூடிய ஜாதி அகங்காரத்தைப் போக்கிக்கொண்டு பரிசுத்தம் அடையும்பொருட்டு அனுஸரிக்கைக் குரியனாய், அவர்களிடத்தில் உத்தம ஞானத்தைக் கேழ்க்கவும், அவர்களுக்கதைக் கொடுக்கவும் யோக்யனாய், ஸர்வேச்வரனாய், ஸர்வபாவனனான என்னைப்போலவே பூஜிக்கத்தக்கவனும் ஆகிறான் என்று இந்த பகவத் உக்தியைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கான இதரப் ப்ரமாணங்களும் இருக்கின்றன. விஸ்தார பயத்தால் அவைகளை எடுத்துரைக்கா தொழிகிறேன்.

இவ்வர்த்தத்திற்கு சைவ வைஷ்ணவமாகிற இரு ஸமயங்களிலும் அனேக உதாஹரணங்களும் ஐதிஹ்யங்களும் உள. அக்ர வர்ணத்தினர் உள்பட ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் கோவில்களில் வைத்து ஸாஷ்டாங்கப் ப்ரணமம் செய்து பூஜித்துவரும் ஆழ்வார்கள் பதின்மரில் மூவர் கடைசி வர்ணத்தினர். இம்மூவரில் ஸ்ரீ வைஷ்ணவமதப் ப்ரவர்த்தகராய் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் நம்மாழ்வார் என்று மஹா ப்ரஸித்திபெற்ற சடகோபர் ஒருவர். இம்மூவரைத் தவிர நான்கு ஜாதிகளிலும் தாழ்வாக நினைக்கப்படும் பஞ்சம ஜாதியில் சேர்ந்தவரும் ஒருவர் உண்டு அவர் திருப்பாணாழ்வார் என்னும் பெயர்பெற்று விளங்குகிறார். அவர் தம்முடைய பக்தி அதிசயத்தினால் பகவானோடு ஐக்கியமாய்ப் போனதாய் சொல்லப்பட்டிருக்கிறது. இழிகுலத்தோராயினும் பகவத் பக்தர்கள் உயர்ந்தகுலத்தோராலும் பூஜித்து வழிபடத்தக்கவர்கள் என்னும் விசேஷ தர்மம் அவருடைய சரிதையில் நன்கு விளங்குகிறது. ஸ்ரீவைஷ்ணவத்தில் இந்த ரஹஸ்யத்தை வெளிப்படுத்தும் சரிதங்களும் அனுஷ்டானங்களும் இன்னும் மிகப்பல,

இவ்வுண்மைகள் சைவ சமயத்திலும் பிரகாசிக்கின்றன. இச் சமய சரிதங்களில் நந்தனரின் சரிதைப் புராதனமாய்ப் ப்ரசித்தி பெற்றது. கேழ்ப்பவர்களை பக்தி என்னும் ஆநந்த ஸாகரத்தில் மூழ்த்திப் பவித்திரம் ஆக்க வல்லது. இச்சரிதையை கல்மனங் களையும் கவரத்தக்க இனிய கீர்த்தனரூபமாய் செய்த ஆசிரியருக் குத் தமிழரனைவரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இக்கீர்த்தனைகளில் சுஷ்க வர்ணாச்ரமிகளும் மனம் இரங்க இடம் இருக்கிறதேயன்றிக் குற்றம் சொல்ல இடமில்லை. இது காறும் இழிகுலத்தோரென்று ஒதுக்கி வைக்கப்பட்ட ஹிந்து ஸமூகத்தின் ஐந்தில் ஒன்றுக்கு மேற்பட்டவரின் முன்னேற்றத்திற்காக அனேக மஹான்கள் முன்வந்து பாடுபட்டுக்கொண்டிருக்கும் இத்தருணத் தில் இக்கீர்த்தனைச் சுருக்கத்தை பிரசாரம் செய்வதும் சாலத்தகுதி யுடைத்தே.

உயர்குலத்தோரென்றும் இழிகுலத்தோரென்றும் கருதப்படும் இருதிறத்தோரும் இக்கீர்த்தனைகளை சிந்தை செய்வதால் உயர்வார் கள். நந்தனார் பெருமையைக் கண்ணாலே காண்பதற்கு முன் வேதியர்க்கிருந்த அகங்காரத்தையும் அஜ்ஞானத்தையும் உயர் குலத்தோர் அணுகவிடாமல் ஒழிப்பாராயின் அவர்கள் பின் பரிதபிக்க வேண்டாமல் உயர்ந்தே இருப்பார். நந்தனார்க்கிருந்த பக்தி, சாந்தி முதலிய ஸத்குணங்களை இழிகுலத்தோர் விடாமல் பற்றுவாராயின் அவர் உயர்குலத்தோரினும் சீரியராகப் பெறுவர்.

11—10—1933. வி. பாஷ்யம் அய்யங்கார்.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

விநாயகர் துதி

இராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி

கணநாதாசரணம் காத்தருள்
கணநாதாசரணம்.

அநுபல்லவி

பணமார்சேஷன்தாங்கிய பார்மீதினிலே நேரும்
குணமார்நந்தன்சரித்திரங் கூறக்கிருபைக்கண்பாரும் (கண)

சரித்திர மகிமை

இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தன்சரித்திரம் ஆனந்தம்-ஆனாலும் அத்
யந்தம் பக்திரசகந்தஞ்-சொல்லச்சொல்ல (நந்தன்)

நந்தன்சரித்திரம்வெகு-அந்தம் சிவனாருக்குச்
சொந்தம் தொலையும்பவ-பந்தம் கேட்டபேர்க்கு (நந்தன்)

ஏது இவனைப்போலே-சாது பூமியிலிருக்
காது அரிதாஇரு-காது படைத்தபேர்க்கு (நந்தன்)

வாடிமனதிளகிப்-பாடி அரகரவென்
றாடிக்கனகசபை-நாடிச் சேருவேனென்ற (நந்தன்)

அண்டர்கொண்டாடுஞ்சோழ-மண்டலந்தனைச்சூழக்
கொண்டமேற்காநாட்டில்-விண்ட ஆதனூரில்வாழ் (நந்தன்)

சிந்து

பழனமருங்கணையும்—புலைப்
　　பாடியது கூரைவீடுதனில்
சுரையோ படர்ந்திருக்கும்—அதைச்
　　சுற்றிலும் நாய்கள் குலைத்திருக்கும்
பருந்தோடி வட்டமிடும்—இளம்
　　பச்சைப் பிசிதமேல் இச்சை கொண்டு
கோழிகூவுங் கூக்குரலும்—பாழுங்
　　கொல்லை யருகினில் வெள்ளெலும்பும்
நரம்புங் குவிந்திருக்கும்—பல
　　நெட்டி மிதந்திடும் குட்டைகளில்
நண்டோ குடியிருக்கும்—சிறு
　　நத்தைகமடம் வலுத்திருக்கும்
தோலூறுங் கேணிகளில்—வெகு
　　தொல்லைப் படும்வாடை சொல்லறியா
பாம்போ அடித்திருக்கும்—வயற்
　　பக்கங்களில் மெத்த நொக்கெலும்பும்
கிழிதோல் நரம்புகளும்—அவர்க்
　　கீனமில்லை சிறு மீனுலரும்
தெருவில் விளையாடிக்கொண்டு—அவர்
　　தெந்தினம் பாடுவர் சுந்தரமாய்
இலுப்பை மணியரையில்—கட்டி
　　இண்டந் தலைகளில் பூண்டிருக்கும்
சங்குதோடு காதணியும்—அருந்
　　தாவடமே அவர் தாவிடமாம்
மணியோ தரித்திருப்பார்—தெரு
　　வாசற் புறத்தினில் ஏசிக்கொண்டு
கொண்டாட்ட மாயிருப்பார்—கையைக்
　　கொட்டிக் கொண்டு தமக் கிஷ்டமுடன்
மதுவுண்டு கெக்கலிப்பார்—பறை
　　வாத்தியமும் வெகு நேர்த்தியுடன்

இருக்கும் புலைப்பாடி—அதில்
ஈசன் திருவடி நேசமுடன்
சாரும் ஒரு புலையர்—அவர்
சாதிமுறை தவறுதவராம்
நந்தனார் அவர் பெயராம்—வெகு
நல்லவ ராமிந்தத் தொல்லுலகில்
அவரே சிவனடியார்.

வசனம்

பின்னும் நந்தனார் தாம் செய்யுந் தருமமேதென்றால், இவர் புலையரானபடியால் சிவஸ்தலங்களுக்குப்போய் வீதியைச்சுற்றிச் சந்நிதியில்வந்து தடி விழுந்ததுபோல் உடல் பணியப் பணிந்து புழுதியில்புரண்டு மயிர்சிலிர்ப்பக் கண்ணீருதிர்ப்ப, வாய்குழறி உரை தடுமாறி ஒருதரம் அழுது ஒருதரந்தொழுது எக்கலித்துக் கெக்கலித்து ஒருதரஞ்சிரித்து ஒருதரம்வெறுத்து ஜகமறந்து அகமிழந்து அனல் கண்டமெழுகதுபோல் உள்ளமுருகி ஆநந்தவெள்ளம்பெருகிக் கள்ளங் கருகிச் சிவனேசிவனேயென்று வாய்வலிக்கப்பேசிக் கைவலிக்கக் கொட்டிக் கால்வலிக்கக் கூத்தாடி நிற்பவர் ஒரு முகூர்த்தஞ் சித்திரத்தி லெழுதும் பதுமைபோல் கண்ணிமையாமல் வாயசையாமல் கையசையாமல் காலெழாமல் ஓசைதெரியாமல் அலையடித்தோய்ந்த கடல்போல் நிறைந்து தன்னைமறந்திருப்பார். தன்நினைவுவந்து பரவசந்தெளிந்து ஈசனைப்பணிந்துகொண்டு வந்தப்பணிவிடை செலுத்தக் கோவிலார் கேட்கக் கும்பிடுபோட்டுச் சொல்லுவார்.

இராகம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

பல்லவி

வாரிருக்குதுதோலிருக்குது வாங்கிக்கொள்ளுவீரே-ம்தள்ங்கள்
பேரிகைக்கும் வீணைக்கும் நல்ல இறுக்கிக்கட்டும்விசை (வாரிருக்)
சிறியவனுன்சாதியொன்றும் அறியாதவனேழை—சிவ
பெருமானுக்கடியேன்செய்யும் பணிவிடையிது (வாரிருக்)

வசனம்

இப்படிப்பத்திசெய்யாநின்ற நந்தனாருடைய வரலாறேதென்றால்.

இராகம் - துக்கடா - ஆதிதாளம்.

ஆதனூரிலொருவேதியர்க்குள்ளே அடிமைக்காரப்பறையன்
சூதும்வாதுமொன் றுந்தெரியாதவன் பரிசுத்தமானபத்தன்
கோதிலாததங்கள்சாதியர்க்குச் சிவகுணங்களைமிகச்சொல்லிக்
காதலோடுதிருப்புன்கூரீசனைக் கண்டுவருவோமென்றார்.

வசனம்

நந்தனார் சிவதரிசனஞ் செய்யவேண்டியதற்காகத் தங்கள் சாதியாரைக் கூப்பிடுகின்றார்.

இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்.

பல்லவி

சிவலோகநாதனைக்கண்டு சேவித்திடுவோம் வாரீர்

அநுபல்லவி

பவமயங்களைப்போக்கி—அவர்
பரமபதத்தைக்கொடுப்பாரந்தச் (சிவலோக)

சரணங்கள்

மானிடசன்மங்கொடுத்தார் தன்னை வணங்கக்கரங்கள் அளித்தார்
தேனும்பாலும்போலேசென்று தோடியில்நின்றுகொண்டு (சிவலோக)

வசனம்

அப்போது நந்தனுருக்கும் பறையர்களுக்கும் உண்டான வாக்குவாதம்.

அவர்கள்—தவஞ்செய்யுஞ் சடங்கிது அல்லவோ, பறையர்கள்
செய்தால் பாவமே யென்றார்.

நந்தன்—தேருந்திருநாளு மிருக்குது போவோம் வாரும் வாருமென்று
வருந்தியும் அழைத்தார்.

அவர்கள்—பொறும் பொறும் இது புண்ணியமல்ல ஏரிக்குப்போவோமென்றிவரையும் அழைத்தார்.
சேரியைநீங்கிப் பதினொரு பேர்கள் பண்புடன்வந்தார்.

நந்தன்—மாரிபோல் ஞானமார்க்கம் பொழிந்து, தவமுனிபோலே தானங்கே நின்றார்.

அவர்கள்—சிவலோகநாதனைச் சேவிப்போம் என்றார்.

நந்தன்—வெறுங்கையோடே போகலாகாதென்று வாருடன்தோலும் வரிசையாய்க் கொண்டார்.

அவர்கள்—சேரியிலுள்ள சீரிதுவென்றார்.

நந்தன்—வந்த புலையருக்குப் பத்தி பெருகவே நெற்றியில் நீறிட்டார்.

அவர்கள்—சத்தியந்தானென்று மெத்தவுங் கும்பிட்டார்.

வசனம்

இப்படி எல்லோருங்கூடிச் சிவனை அடிக்கடிவணங்கி அரகரா வென் றுரைத்திடுஞ் சத்தம் பரமனே யறிவார். இப்படி நந்தனார் பதி னொருபேர் பறையரோடு திருப்புன்கூர் வந்து சேர்ந்தார்.

சவாயி!

நலம்வந்துவீதி வலம்வந்துகண்கள்
சலம்வந்துசோரும் பலம்வந்ததெங்கள்
குலம்சுத்தமாச்சு மலம்வெந்துபோச்சு
நலங்கண்டோமென்று நிலங்கொண்டுநின்றார்.

வசனம்

அந்தத் தலத்திலே நந்தி மிகவும் பெரிதானபடியினாலே சிவலிங்க தரிசனஞ் செய்வதற்கு நந்தி மறைத்திருப்பதால், நந்தனார் துயா மடைந்து சொல்லுகின்றார்.

இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி

வழிமறைத் திருக்குதே மலைபோலே ஒரு
மாடுபடுத் திருக்குதே. (வழி)

பாவிப்பறையனிந்த வூரில்வந்துமிவன்பாவந்தீரேனோ உன்றன்
பாதத்தில்சேரேனோயேறேனோசிவலோகநாதா—மாடு (வழி)
தோடியில்நின்றுதெரிசித்தாலும்போதும்
கோவில்வரமாட்டேனே ஐயே ஓரடிவிலகினால் போதுமங்கேநின்று
உற்றுப்பார்க்கச் சற்றேவிலகாதோ மாடு (வழி)

வசனம்

இப்படி நந்தனார் தரிசனங்காண ஓயாமல் மனம் வருந்தும்போது சுவாமி நந்தனார்மீதிரங்கி நந்தியை விலகச்சொன்னார்.

இராகம்-துக்கடா-ரூபகதாளம்.

ஒருநாளும்வாராதபத்தன் திருநாளைப்போவானெனுஞ்சித்தன்
உலகெங்கும் பிரசித்தம்கண்டும் ஒதுங்காமலிருந்தது குற்றமே.

இராகம்-அங்குசதோணி-ரூபகதாளம்.

பல்லவி

சற்றேவிலகியிரும்பிள்ளாய் சந்நிதானமறைக்குதாம் நீ (சற்)

அநுபல்லவி

நற்றவம்புரியுநம்முடைத்திருநாளைப்போவார்வந்திருக்கிறார் (சற்)

இராகம்-சாவேரி-ரூபகதாளம்.

பல்லவி.

மற்றதெல்லாம்பொறுப்பேன்
முத்தியானாலும் கொடுப்பேன். (மற்ற)
பத்தனுக்குக்குற்றஞ்செய்தால்
அதைப்பொறுக்கமாட்டேன். (மற்ற)
திடுக்கென்றவரைத் துடிக்கப்பேசி
அடிக்கப்பொறுக்கமாட்டேன். (மற்ற)
பசிக்குதென்றுவருகையிலொருவன்
புசிக்கப்பொறுக்கமாட்டேன். (மற்ற)

வசனம்

இப்படி சுவாமி சொல்லும்போது நந்தி மனந்து கலங்கி நூர விலகி நின்றார். நந்தன் சிந்தைகுளிர்ந்து அளவில்லாத ஆனந்தமடைந்து குதித்தார் கெக்கலித்தார் கொண்டாண்டித்தார் நூதித்தார் திருவடியுள்ளே பதித்தார் எங்குஞ் சிவமாகப் பாவித்தார்.

கடுக்கா

குதித்தார்எக்கலித்தார் உள்ளங்களித்தார்
பள்ளுப்படித்தார் கண்ணீர்வடித்தார் பற்களைக்கடித்தார்
ஒருகரந்துடித்தார் இருகரம்நடித்தார்
இப்படித்தரிசனஞ்செய்தார் நந்தனூர் தரிசனஞ்செய்தாரே.

வசனம்

தரிசனம் பண்ணியபின்பு கொண்டுவந்த பணிவிடைசெலுத்தி அவ்வீதியில் மட்டையூறுங் குட்டையைக் குளமாய் வெட்டவேணுமென்று விசாரமுற்றார். சுவாமி இதையறிந்து நாளைப்போவாராலே குளம்வெட்டத் தாளப்போகாதென்று தன் பிள்ளையை ஆளாகப் போகச்சொன்னார்.

துக்கடா

மாளாப்பிறவிபோக்கும் பிள்ளையார் வந்தார்.

நாளைப்போவார்—நீயாரப்பா வென்றார்
பிள்ளையார்—நானுன்னுளப்பாவந்தே னென்றார்
நாளைப்போவார்—குட்டையைக்குளமாய்வெட்டுவே னென்றார்
பிள்ளையார்—வெட்டினால்மிகு புண்ணிய மென்றார்
நாளைப்போவார்—அதெம்மட்டும் எட்டு மென்றார்
பிள்ளையார்—குளம்வெட்டுமட்டும் எட்டு மென்றார்
நாளைப்போவார்—அற்பமாய்ப்பதக்குநெல்லைக் கொடுத்தார்
பிள்ளையார்—அப்பனேயிதுபோதும்போதுமென் றுரைத்தார்
நாளைப்போவார்—களித்துநிருவிகற்பமா யிருந்தார்
பிள்ளையார்—குளத்தைவெட்டுதற் கிசைந்தார்

வசனம்

நந்தனார் திருப்புன்கூர்ச் சிவலோகநாதனைத் தரிசனம் செய்து ஆதனூர் வந்த நாள்முதல் ஊனுறக்க முதலானதும் விட்டார், தில்லையம்பலம் திருச்சிற்றம்பலமென்று சொல்லத்தலைப்பட்டார், சேரியிலுள்ள பெரியோர்களைக் கூப்பிட்டார், வணங்கிக்கும்பிட்டுச் சொல்லுவார்.

இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி

சிதம்பரம்போவேன் நான்-நாளைச்-சிதம்பரம்போவேன்நான்.

அனுபல்லவி

சிதம்பரம்போவேன் தேறித்தெளிவேன்
பதங்களைப்பாடிப் பார்புகழ்தில்லைச் (சிதம்பரம்)

வசனம்

நந்தனார் சேரியிலுள்ள புலையர்களை அழைத்துக்கொண்டு சிதம்பரம்போய்த் தரிசனம்பண்ண வேண்டுமென்று ஆசையுற்று பக்தி மார்க்கங்களைச் சொல்லுகின்றார்.

இராகம்-மாஞ்சை-ரூபகதாளம்.

நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாற்றநரம்புமின்னஞ்சுமப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாறுமுடலைக்கண்டுகளிப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாளைவீணுகக்கழிப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நமனார்க்கஞ்சியோடியொளிப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ - சிவ
ஞானத்தைப்பாராமலிருப் பேனோ-நான்

நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாட்டிலிகழுஞ்சென்மப்படைப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-தில்லை
நாதனைக்காணமல்புசிப் பேனோ-நான் (நாளை)

இராகம் - பியாகு - ரூபகதாளம்.

எல்லோரும் வாருங்கள்
சுகமிருக்குது பாருங்கள் நீங்கள் (எல்லோரும்)
நல்லோர்பணிந்திடுந் தில்லையம்பல
நாதன்பாதம் பணிந்துகொள்வோம் (எல்லோரும்)

கண்ணிகள்

வாருங்கள் பரமானந்தமிருக்குது பாருங்கள் (வாருங்கள்)
சடமெடுத்தபின் னேதுமேகண்டிலீர்
விடமெடுத்துண்ட மேனியன்தேவர
வடம்பிடித்திட வாருங்கள் தில்லையில்
இடம்பிடித்துநா மெல்லோரும்வாழலாம் (வாருங்கள்)
சொல்லடாதில்லைச் சிற்றம்பலமென்று
மெல்லடாவாயைச் சந்நிதிநேரவே
நில்லடாஇந்த மாயப்பிறவியைக்
கொல்லடாசிவ லோகங்குடிபுக (வாருங்கள்)
கள்ளடாநம தில்லறவாழ்க்கையைத்
தள்ளடாநந்தன் சொல்லுறுதியென்று
கொள்ளடா தில்லையம்பலத்தாண்டவன்
பள்ளடாவென்று பாடிக்கூத்தாடியே. (வாருங்கள்)

வசனம்

இப்படி வாருங்களென்றழைக்கப் புலையர்வாராமலிருக்க நந்தனார் நல்லவார்த்தைசொல்லிப் பறையரைச் சிவநாமத்தைச்சொல்லச்சொன்னார்.

2

இருசொல் லலங்கார வாக்குவாதம்

நந்தனார்—தில்லையம்பலமென் றுசொல்லச்சொன்னார்.

புலையர்—கள்ளப்பேச்சென் றுமெள்ளச்சொன்னார்.

நந்தனார்—விட்டநாள்நினையாம லெட்டுநாள்மறவாமல்
நிஷ்டைபண்ணாதசென்மம் நஷ்டமென்றார்.

புலையர்—விட்டவிரைமுளையாமல் நட்டபயிர்பலியாமல்
கெட்டதானல்கிராமம் நஷ்டமென்றார்.

நந்தனார்—உங்கள்புலைத்தன்மை போகுமென்றார்.

புலையர்—எங்களைக்கெடுத்தாயே பாவியென்றார்.

நந்தனார்—தினமுஞ்சிவனைப்போற்றிக் களிப்போமென்றார்.

புலையர்—பதரைத்தூற்றிநெல்லை யளப்போமென்றார்.

நந்தனார்—பெண்ணாசைபொன்னாசை விடுதலேநன்றாம்.

புலையர்—எந்நாளுமுன்னாலே கெடுதலேயுண்டாம்.

நந்தனார்—நலத்தைக்கொடுக்கவந்த நற்குருவென்றார்.

புலையர்—குலத்தைக்கெடுக்கவந்த கோடாலிக்காம்பென்றார்.

ஏசல்

புலையர்—பார்ப்பாரத்தெய்வமது பலிக்காதுபறையரைக்
காப்பாற்றமாட்டாது கைவிடுமென்றார்.

நந்தனார்—பார்ப்பார்பறையரென்று பாராதுபரிதிபோல்
காப்பாற்றுமல்லவோ கண்ணுதலேயென்றார்.

புலையர்—அடுக்காதவார்த்தையை அல்லும்பகலோதியே
பிடிக்கிறாய்பிடிவாதம் பேசாதேயென்றார்.

நந்தனார்—கடுக்காயைத்தின்பாரோ கன்னலதுபோலே
கொடுக்காததானாலும் கொள்ளுவீரென்றார்.

புலையர்—பித்தனென்றுசொல்லுவார் பேருலகிலெல்லோருஞ்
சத்தியமிதல்லவோ தள்ளுவீரென்றார்,

நந்தனார்—பித்தனாயிருந்தாலும் பிறவியறுத்தனைவர்க்கும்
முத்திகொடுக்கும்நல்ல மூர்த்தியவரென்றார்.

புலையர்—இத்தனைநாளுமிங்கே யில்லாதவார்த்தையைக்
கற்றுவந்துமென்ன காரியமோவென்றார்.

நந்தனார்—இத்தனைநாட்சென்று ஈசனடித்தாமரை
பத்திசெய்பவரும் பாக்கியமீதென்றார்.

வசனம்

எப்போதும் சிவனைக் கொண்டாடினால் நம்முடைய தொழிலுக்குக் கெடுதலுண்டு, பண்ணைவிளையாது என்று ஒரு புலையர் சொல்ல, நந்தனார் சொல்லுகிறார்.

இராகம் - தெண்டகம் - ஆதிதாளம்.

அரகராவென்று ஒரு குழிநட்டால் ஐங்கலமேவிளையும்
பாவம்-தங்காமல் தொலையும்

சிவசிவாவென்று ஒரு தரஞ்சொன்னால் சென்மசபல மாச்சு
புண்ணிய-கருமமதுவே யாச்சு

தில்லையம்பல தெரிசனங்கண்டால் தேவரும்வருந்தாரோ
அந்த-மூவரும்பொருந் தாரோ

அடிமைக்காரத்தொழில்செய்வது துன்பம் ஆனாலுமேச்சே
சென்மம்-போனாலும் போச்சே

வசனம்.

நந்தனார் புலையர்களைப்பார்த்து, அனேக விதமாய்ச் சொல்லி நாளைப்போவேனென்று சொல்லுகின்றார்.

சிந்து

நாளைப்போவேனென்றாராம்—அங்கே
நாடும்பறையர்களோடிவந்து
அண்ணேநீபோகாதே—நம்ம்
காண்டைபொல்லாதவன்வேண்டிக்கொள்ளான்.

வசனம்

இப்படிச் சொல்லிய புலையரைப்பார்த்து நந்தனார் சொல்கிறார்.

இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்.

பல்லவி

ஆண்டைக்கடிமைக்காரனல்லவே—யான்
ஆண்டைக்கடிமைக்காரனல்லவே

அநுபல்லவி

மூன்றுலோகமும் படைத்தளித்திடும்
ஆண்டவர்கொக் கடிமைக்காரன் (ஆண்டை)

சரணங்கள்

ஆசைக்கயிற்றினிலாடிவரும்பசு
பாசமறுத்தவர்க் கடிமைக்காரன் (ஆண்டை)

தில்லைவெளிகலந்தெல்லைகண்டேறித்
தேறித்தெளிபவர்க் கடிமைக்காரன் (ஆண்டை)

சீதப்பிறையணிந் தம்பலத்தாடிய
பாதம்பணிபவர்க் கடிமைக்காரன் (ஆண்டை)

வசனம்

அந்தச்சேரியில் புலையர் கூட்டங்கூடி மூத்தோனால் நந்தனுருக்குப் புத்தி சொல்வோமென்றெண்ணி அந்தச் சேரியிலே வெகுநாளாயிருக்கின்ற ஓர் புலையன் வயதுமிகுந்து உடல்தளர்ந்து பல்லுகளுதிர்ந்து தோல் சுருங்கி நரம்பு தெரிந்து முதுகுசரிந்து முழுதும்வளைந்து அங்கம்சொறிபடர்ந்து தினவுமிகுந்து அதனைச்சொறிந்து அந்நீர்வடிந்து அவ்வுடல்நடுங்கி இவ்விதமிருக்கும்பெரிய கிழவனையனுப்பக் கோலூன்றிக் கூனிக்குறுகிக் கோணலாய் நடந்துவந்து நந்தனைப்பார்த்துக் கட்டியணைத்துத் தலைநிமிர்ந்து கண்ணீர்சொரிந்து மார்பில்வழிந்து மனங்கனிந்து காதல்மிகுந்து ஒன்றுந்தெரியாதவரென்று நினைந்து பரிந்து ஞாயமறிந்து சொல்வான்.

இராகம் - பியாகு - ஆதிதாளம்.

பல்லவி

ஞாயந்தானோநீர்சொல்லும்-ஓய்-நந்தனுரே
நம்மசாதிக்கடுக்குமோ (ஞாய)

சரணங்கள்

சேரியிலில்லா வழக்கம்-நீர்
செய்துகொண்டுவந்த பழக்கம்-இந்த
ஊரிலெங்குமந்த முழக்கம்-வெகு
உறுதியாச்சுது ஒழுக்கம்-இது (ஞாய)

சிதம்பரமென்கிற பேச்சு-நாங்கள்
செய்திடுங்காரியம் போச்சு-அது
மதம்பிடித்ததுபோ லாச்சு-இந்த
மண்டலப்பறையருக் கேச்சு-இது (ஞாய)

பறையருக்கேது தைப் பூசம்-அதைப்
பார்க்கவேயுனக்கு விசு வாசம்-சிறு
பயல்களுக்கேயுப தேசம்-நீர்
பண்ணிவைத்ததெல்லாம் மோசம்-இது (ஞாய)

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி

சாமிதெரிசனம்நமக்குண்டோ-புலைச்
சாதியன்றோவந்தநீதியறியாமல் (சாமி)

அநுபல்லவி

பூமிதெரிசனம்போதும்போதும் வெகு
புண்ணியமேசோறுபோடுமின்ன மொரு (சாமி)

சரணங்கள்

*நாத்துநறும்புகளைச்சுமப்பதும் உழுவதும்
நஞ்சைவயலைச்சுற்றி வருவதும் வளம்பெறப்
பாத்திகள்கட்டிவிரைதெளிப்பதும் பறிப்பதும்
பாயும்மடையைத்திறந்திடுவது மன்றியில் (சாமி)

* நாற்றுக்கட்டு

சேரியிடையில்குடியிருப்பதும் பதருகள்
சித்றத்தூற்றிநெல் லளப்பதும் பார்ப்பதும்
ஊரைவளைந்துதமுக் கடிப்பதும் மதுக்குட
முண்டுகளித்துநாமுறங்குவ தன்றியில் (சாமி)
ஆண்டைமார்களிடும்பணிவிடை செய்வதும்
அருகில்நின்றுகையைவிடுவதும் நடுவதுந
தாண்டிநடந்துகோல் பிடிப்பது மளப்பதும்,
தனித்துச்சுடலைதினங்காப்பது மன்றியில் (சாமி)

வசனம்

பெரியகிழவனைப்பார்த்து நந்தனார் சொல்லுகின்றார்.

இராகம்-தெண்டகம்-ஆதிதாளம்.

சிதம்பரதெரிசனங்காணவிடிவிந்தச்சென்மஞ்சபல மாமோ
செனனமரணசமுசாரம்பெருகவேசெய்தவினைகள் போமோ
கண்ணுங்கருத்திருக்கச்சிவனைக்காணமல்காலங்கழிக்க லாமோ
காலபாசநமதருகில்வாராமல்கண்டுபயந்து போமோ
இப்படியெப்போதுமிருப்போமென்றுஎண்ணியிருக்க லாமோ
இதயமறிந்திடச்செய்திடுங்கர்மங்கள் இகழ்ந்துபிரிந்து போமோ
பின்னுமுன்னுமறியாதமூடர்கள்புத்திகேட்க லாமோ
புலையரவாடியிலிருக்கினுமெய்திடும்புண்ணியங்கள் போமோ
பரமசிவனைக்கொண்டாடவேணுமென்றுபரிந்துபாவி பார்த்தேன்
பாபஞ்செய்பவர்க்குப்பலியாதுஅதில்பாடுபட்டுப் பார்த்தேன்.

வசனம்

நந்தனார், இவ்விதஞ்சொல்லி சிவகாமவல்லிபாகனை நினைந்து நீறள்ளிப் பெரியகிழவன் முகத்திலேதடவி வாயிலேபோட்டுக்கட்டியணைத்துக் காதிலே சிவமந்திர முபதேசித்தார். உபதேசித்தவுடனே கிழவன் பித்துக்கொண்டு நந்தனருடைய மகிமையைச் சொல்ல வாரம்பித்தான்.

பெரியகடுக்கா

திருநாளைப்போர்வாரிந்தச்சேரிக்குமூருக்கும்
யாருக்கும்பெரியவர் திருநாளைப்
ஒருதரமாகிலுஞ் சிவசிதம்பரமென்று
உரைத்திடரென்றிவ்வுண்மைகூறிய திருநாளைப்

வசனம்.

இப்படிப் பெரியகிழவன் சொல்லக்கேட்டு, நந்தனாரலே கெடுக்கப் பட்ட பதினொருபேர்களுக்குள்ளே நீயும் பன்னிரண்டாம்பேராயிருக் கத் தலைப்பட்டுச் சிவசிவாவென்றுசொல்லிச் சேரியைக்கெடுக்கத் தலைப் பட்டீர்களே கிழவாவென்று மிகவுந்துன்பமடைந்து புலையர் ஒருவர்க் கொருவர் சொல்லித் துயரப்படுகின்றார்கள்.

இராகம்-புன்னாகவராளி-சாப்புதாளம்.

பல்லவி

நாம் என்னசெய்வோம் புலையரே-இந்தப்
பூமியிலில்லாதபுதுமையைக்கண்டோம். (நாம்)

சரணங்கள்

நந்தனொருவனாலேயிப்படி யாச்சு
நன்மையுந்தின்மையுமில்லாமற் போச்சு
சந்திக்குச்சந்திகூத்தாட லாச்சு
சாமியுமில்லாமலெங்கேயோ போச்சு (நாம்)

சேரிக்குள்பதினொருபேர்களுங் கெட்டார்
செய்யுந்தொழில்முறையாவையும் விட்டார்
ஊருக்குப்பெரியகிழவனுட் பட்டார்
உண்மையறியாமற்சிதம்பரந் தொட்டார் (நாம்)

வசனம்

அந்தச்சேரியிலே சில புலையர்கள் பத்திசெய்ததால், சேரி சிவ லோகம்போல விளங்கியது. சிலநாளுக்குப் பின்பு புலையர்களெல்லாங் கூடி நந்தனைப்பணிந்து நல்லவார்த்தைசொல்லி நாங்களெல்லோரும்

நாளொன்றுக்கு மூன்றுவிசை சிவனே யென்று சொல்லுகிறோம், மற்ற வேலையில் எங்கள் பண்ணைத்தொழிலைச் செய்வோமென்று கேட்க நந்தனார் நல்லது அப்படியே தப்பாமல் செய்யுங்களென்று சொல்லி விட்டுச் சேரிப்பெரிய கிழவனுடன் திருப்புன்கூருக்குப் போய்வந்த புலையர்களைப்பார்த்து நான் சிதம்பரம்போவேன் நீங்களிங்கே இருங்க ளென்று நந்தனார் சொல்லுவார்.

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி

சிந்தனைசெய்துகொண் டிருந்தா லுங்களுக்
கெந்தவிதமுங்கரை யேறலாம்சிவ (சிந்தனை)
அந்தணர்முனிவரு மிந்திராமாரும்
வந்துபணியுமர விந்தப்பொற்பாதத்தைச் (சிந்தனை)
தம்புருவணிந்திடுந் தும்புருநாரத
ரும்பணியும்பொன் னம்பலவர்ணனை (சிந்தனை)

வசனம்

நந்தனார் உபதேசஞ் சொல்லக்கேட்டு ஆறிரு பறையர்கள் நிஷ்டையிலிருக்கத் தொடங்கி னின்றார்கள். மற்றப் புலையர்கள் கூட்டங் கூடி அந்தணனிடத்தில்போய்ச் சொல்லத் தீர்மானித்தார்கள்.

நொண்டிச்சிந்து-இராகம் பைரவி-ஆதிதாளம்.

ஐயேஒருசேதிகேளும்—உங்கள்
அடிமைக்காரப் பறையனடத்தையெல்லாம்
வரவரக்கெட்டுப்போச்சு—சேரியில்
வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான்
குடியிருக்க மாட்டோம்—எப்போதும்
கூக்குரல் போடுகிறானுக்கைமறந்தே
இருப்பானொருவேளை—பொல்லாத
ஏக்கமடைந்தவன்போல் நாக்கைவளைத்துச்
சிரிப்பானொருவேளை—தில்லைச்
சிதம்பர மென்றுசொல்லி மதம்பிடித்தே

அழைப்பானொருவேளை—எங்களையும்
அண்ணேவாவென்றுசொல்லிக் கிண்ணாரங்கொட்டிக்
குதிப்பானொருவேளை—திக்குமுக்கல்
கொண்டவன்போலெதையோ கண்டவன்போல்
களிப்பானொருவேளை—மரம்போலே
கையசைக்கல் காலசைக்கல் மெய்யசைக்கலும்
இருக்காதொருவேளை—தாளம்போட்
டெக்கலிகொட்டியே குடிசைக்குட்புகுந்து
பேசானொருவேளை—கண்டதெல்லாம்
பிரட்டென்று சொல்லுவான்முரட்டுத்தனம்
மன்னருச்சாமிபோலே—கிளம்பி
வாய்விட்டலறுங்குரலுரெட்டுமே
ஐயோசிவனேயென்பான்—கீழே புரண்
டழுவானியாரையுந்தொழுவானே
தூண்டிமீனதுபோலே—துள்ளித்துள்ளித்
துடிப்பான்பற்களைக்கடிப்பானே
சிவனென்றுமூன்றுவாட்டி—நாங்களுஞ்
செப்பவேணுமல்லாவிடில்வப்பிலுதைப்பான்
கோவிலிற்போவோமென்பான்—எங்களையும்
கும்பிடச் சொல்லியில்லா வம்புபண்ணுவான்
சுற்றிவரச்சொல்லியடிப்பான்—சிவன்பேரைச்
சொல்லடாசந்நிதியில் நில்லடாவென்பான்
சொல்லித்தொலைக்கவேணும்—இல்லாவிடில்
சுக்குமாந்தடிகொண்டுநொக்கிவிடுவான்
கொம்பேறிமூக்கன்போல—முதுகினில்
குத்துவான்புலிபோலேதத்துவானே
இதுவென்னகாரணமோ—எங்களுக்
கீனமாயிருக்குதுமானமல்லவோ
கறுப்பண்ணசாமிதானோ—இருளன்
காட்டேறிவீரனிவன் வீட்டேறியோ
பாவாடைத்துரைதானோ—ரண
பத்திரகாளியோவுன்மத்த வீரனோ

பூசைகள் போட்டுப் பார்த்தோம்—ஒன்றிலும்
போவதில்லை காரியமாவதில்லையே
எங்கள்வள்ளுவரைக் கேட்டோம்—அவர்
எடுத்துச்சொன்னாரிதைவிடுத்துச்சொன்னார்
மயானஉருத்திரனார்—பிடித்து
வாட்டுதடாஇப்படியாட்டுதென்றார்
தெளியாதென்றுசொன்னார்—ஐயே
தெளியாதென்றசொன்னார்.

இராகம்-கமாசு-ஆதிதாளம்.

பல்லவி

அடக்கியாளுமையே-இவனை-அடக்கியாளுமையே

அநுபல்லவி

அடக்கியாளுமிந்தத் துடுக்குக்காரனிவனை
யடித்துப்பிடித்துக் கண்டித்துப்படபடத்து (அடக்)

வசனம்

சேதிசொல்லவந்த புலையர்களைப்பார்த்து வேதியர் சொல்லுவார்.

விருத்தம்

காலமேவந்தானிங்கே கள்ளக்கும்பிடுகள்போட்டுப்
பாலனைப்போலேபேசிப் பசப்பினான்போடாவென்றேன்
வேலைசூழுலகிலித்த வீணனைப்போலேகாணேன்
சீலமாஞ்சிதம்பரத்தைச் சேரவேவிடைகொடேனே.

வசனம்

அந்தணர்சொன்னமொழியைப் புலையர்கள்கேட்டு மிகவுஞ் சந்தோஷங்கொண்டு சேரிவந்து சேர்ந்தபின் நந்தனார்எப்போதும்போலே அந்தணரிடத்தில் வருகிறார்.

இராகம்-உசேனி-ரூபகதாளம்.

தில்லையம்பலத்தலமொன் றிருக்குதாம்-கண்டபேர்க்கு
சென்மமானபிணியைக் கருக்குதாம்
உயருஞ்சிகரக்கும்பந் தெரியுதாம்-பார்த்தவர்க்கு
உள்ளங்குளிரக்கருணை புரியுதாம்
பண்ணவரயன்மாலுந் தேடுமாம்-தில்லைக்காட்டில்
பாம்பும்புலிக்கும்நிர்த்த மாடுமாம்
அரியபிரமனெழுத்தைத் தள்ளுமாம்-ஆரையுமது
ஆனந்தமுழுக்காட்டிக் கொள்ளுமாம்
உருவில்லாதகுருவொன் றிருக்குதாம்-மூலக்கனலை
ஊதியெழுப்பிறக்கண்ணீர் பெருக்குதாம்
உருவமாகிவெளியே வருகுதாம்-நான்மறைக்கும்
உணர்வில்லாதகாட்சி தருகுதாம்
போய்வருகவுத்தாரந் தாருமே-பொன்னடித்தாள்
போற்றுவேன்கண்ணாலே பாருமே. (தில்லை)

இராகம் - தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி

உத்தாரந்தாருமையே-எனக்
கொருவருமில்லைபாகதியடைய (உத்தாரந்)

வித்தைகள்கற்றதுமில்லை-யாதொரு
பத்தியிற்சென்று பாகதியடைய (உத்தாரந்)

குற்றங்களெத்தனை கொடியேன்செய்தேன்
அத்தனையும்பொறுத் தாதரவாக (உத்தாரந்)

பெண்டுபிள்ளையென்று பேயனைப்போலவே
கண்டுகளித்துக் காலங்கழித்தேன் (உத்தாரந்)

தில்லைச்சிதம்பரத்தைத் தெரிசித்துவந்துங்கள்
எல்லையைக்காத்துக் கொண்டிருக்கிறேனையே. (உத்தாரந்)

வசனம்

நந்தனார் சிதம்பரம்போகிறேனென்று சொல்வதால் அந்தணர் கண்டிக்கிறார்.

இராகம்-லாவணி-ஆதிதாளம்.

பல்லவி

பறையாநீசிதம்பரமென்றுசொல்லப்
படுமோடாபோகப்படுமோடா-அடா (பறையா)

அநுபல்லவி

அறியாத்தனமினிசொன்னாலினிமே
லடிப்பேன்கூலியைப்பிடிப்பேன்பாவிப் (பறையா)

சரணங்கள்

சிதம்பரமென்பதை விடு-கொல்லைச்
சேரடியிலேவந்து படு-நாற்றைப்
பதத்திற்பிடுங்கி நடு-கறுப்
பண்ணனுக்கேபலி கொடு-அடா (பறையா)

எப்போதுமொருதடி பிடி-கையி
லெடுத்துக்கொண்டேதமுக் கடி-உள்ளங்
கற்பனையாய்ப்பள்ளுப் படி-கால்
நோகாமலேகாடியைக் குடி-அடா (பறையா)

இராகம் - நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி

சிதம்பரம்போகாதே-சொன்னேன்-சிதம்பரம்போகாதே

அநுபல்லவி

சிதம்பரம்போனால் ஹிதம்பெறலரமென்று
சேதிசொல்லுறாய் சாதிக்கடுக்குமோ (சிதம்பரம்)

சரணங்கள்

கள்ளக்கும்பிடுதனைப் போடாதே-உன்
கபடமெல்லாமிங்கே காட்டாதே
மெள்ளச்சொல்லடா முழுமூடா கீழே
தள்ளிவிட்டு உன்னைத்தகும்படி செய்வேன் (சிதம்பரம்)

நாத்தைப்பிடுங்கிக்கண்ணி நடவேணும்-அந்த
நஞ்சைவயலைச்சற்றே யுழவேணும்
பார்த்துப்பாம்படித்துப் பழுதுவாராமல்
பாயுஞ்சலம்விட்டுப் பார்த்திடுவாய்நீ (சிதம்பரம்)

அடிக்கடிமறுத்துநான் சொல்லவோ-நீ
அடிமைக்காரப்பய லல்லவோ
எடுத்துக்காட்டுவேனிருக்குதுசாதனம்
தடுத்துப்பேசினால் தாடையில்டிப்பேன் (சிதம்பரம்)

வசனம்

அந்தணர் கண்டித்துச்சொன்னதால் நந்தனார் துயரமடைந்து சேரியில்வந்து சிவனைநினைந்து பக்திபுரிந்து கொண்டாடுகிறார்.

இராகம்-தெண்டகம்-ரூபகதாளம்.

பல்லவி

பத்திபண்ணிக் கொண்டிருந்தால்-முத்திபெறலாமே.

அநுபல்லவி

எத்திசையுமெவ்வுயிர்க்கு மவ்வுயிராய்நிறைந்திருக்கும்
வஸ்துவென்று அம்பலவன் மலரடிதினந்தோறும் (பத்தி)

வசனம்

சிலநாளைக்குப் பிறகு நந்தனார் அந்தணரிடம்வந்து சிதம்பரம் போக மிகவும் வருந்திக்கேட்டார்.

அறுசீரடி விருத்தம்.

வேதியரே பெரியவரே நல்லவரே நான்கடையன் விண்ணோர் மெச்சும், சாதியரே பலகலையுங் கற்றுணர்ந்து புரையில்லாத் தவமே செய்யும், போதியரே பத்தியில்லா நான்புலைய னேதறிவேன் புண்ய மூர்த்தி, ஆதிகுரு சிதம்பரத்தைக் காணவென்றே யாசைகொண்டே னனுப்புவீரே.

இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி

தில்லைச்சிதம்பரத்தை யொருதரமாகிலுந்
தெரிசித்துவாவென் றுத்தாரந்தாருமையே (தில்)

அநுபல்லவி

தில்லைச்சிதம்பரத்தைக் கண்டால்பிறவிப்பிணி
இல்லையென் றுபெரியோர்சொல்லக்கேட்டிருக்கிறேன் (தில்)

அல்லலறுக்குந்திரு வம்பலநாயகன்
அல்லும்பகலுமாடி யானந்தம்பெருகிய (தில்)

ஆதிமுதலாயென்னை யடிமைகொண்டதல்லவோ
வேதகுலமேயென்றன் மீதில்தயவுசெய்து (தில்)

வசனம்

நந்தனார் தெரிசனஞ்செய்ய உத்திரங்கேட்க அந்தணர் சொல்லு கின்றார்.

இராகம்-சூரியகாந்தம்-ஆதிதாளம்.

பல்லவி

நந்தாவுனக்கிந்தப்பரமை வந்தகாரணம் நானறிந்திடச் சொல்லு (நந்தா)

அநுபல்லவி

அந்தரங்கமுள்ள சொந்தப்பறையனை
யன்றியிருப்பதுபோய் சண்டைபிடிக்கவந்தாய் (நந்தா)

இராகம்-தனசரி-ஆதிதாளம்.

பல்லவி

பித்தனாய்ப்போனதென்ன-நந்தா (பித்த)

அனுபல்லவி

எத்தனையோபுத்திகளெடுத்துப்படித்தும் (பித்த)

சரணங்கள்

சித்தமிப்படிச் செய்ததாரோ
பத்துதலில்லாமலே பண்ணியபோரோ (பித்த)

வசனம்.

மனதில் துயரமுற்ற வேதியரை நந்தனார் மிகவும் வணங்கிச் சொல்லுகின்றார்.

இராகம்-செங்கலா-ரூபகதாளம்.

பல்லவி

பித்தந்தெளியமருந்தொன்றிருக்குது பேரின்பமன்றுள்ளே

அநுபல்லவி

மற்றமருந்துகள்தின்றாலுமுள்ளுக்குவல்லேவல்லே-ஐயே அடிமை
(பித்தந்தெளிய)

சரணங்கள்

பாம்பும்புலியுமெய்ப்பாடுபட்டுத்தேடிப் பார்த்துப்பயிரிட்டது
பாரளந்ததிருமாயனும்வேதனும்பார்த்துக்களித்ததுண்டு
பார்வதியென்றொருசீமாட்டியதில்பாதியைத்தின்றதுண்டு- இன்னம்-
பாதியிருக்குபறையாநீயும்போய்ப்-பாரென்றுத்தாரந்தாருந்தாரும்
(பித்தந்தெளிய)

பத்துத்திசையும்பரவிப்படர்ந்தாலும் பார்த்துப்பிடியாரே
தத்திக்குதிக்குந்தாளங்கள்போடுந் தண்டைசிலம்புகொஞ்சும்
தித்திக்குந்தேனேசெங்கரும்போ நல்லசித்தமுடையார்க்கே-என்
சித்தத்தைக்கட்டியிழுக்குதுஅங்கே-சென்றால்போதுங்கண்டால்தீரும்
(பித்தந்தெளிய)

ஊரைச்சொன்னாலுமிப்பாவந்தொலையும் ஊழ்வினையூடறுக்கும்
பேரைக்கொண்டாடிப்புலம்புகிறார்வெகு பேர்களுக்குப்பிழைப்பு
சாருநரைதிரை தீருமருந்துச் சாதியைப்பாராது
தீராதநோய்கள் படைத்த வெனக்குத் தீருந் தீருமையே-அடிமை
(பித்தந்தெளிய)

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி

சிதம்பரம்போகாம லிருப்பேனோ
சென்மத்தைவீணுக்கிக் கெடுப்பேனோ (சிதம்பரம்)

பத்தியுமனமும் பொருந்தினதங்கே
சத்தியஞ்சொன்னேன் சடலமுமிங்கே (சிதம்பர)

ஆசையுநேசமு மானந்தமங்கே
பேசலும்பாசமும் பிதற்றலுமிங்கே (சிதம்பர)

வசனம்

இப்படி நந்தனர்சொல்ல வேதியர் மூர்ச்சையடைந்து விழுந்து தெளிந்து எழுந்துசொல்லுவார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நாற்பதுவேலிபூமி நடவுநட்டாகவில்லை
பார்ப்பதுமில்லைச்சவப், பழமதுதின்றாய்ப்பண்ணை
காப்பதுமில்லையுன்னைக் கைவிட்டமனதுவல்லை
சேர்ப்பதாலாவதில்லைச் சேரியிற்றெலைந்துபோடா,

நந்தனார் ஏர் உழுதல்

இராகம்-சஹாநா-ரூபகசாப்புதாளம்.

பல்லவி

பத்தியாகஆண்டைசொற்படிசெய்தான்நந்தன்பலருடன்கூடிமிகக்

அநுபல்லவி

கர்த்தனைசித்தங்களித்துக் கதித்தான்
கமலபாதத்தை நாடி—மெத்தக்
காதலாகவேகொண் டாடி
மனம் நீடி (பத்தி)

சரணங்கள்

நீருள்ள ஆதனூர்நன்செய் புன்செய்களை
நித்தமுமேர்கொண்டு ப்புழுது-அறச்
சுத்தமதாகவே யுழுது
காலைப் பொழுது (பத்தி)

கறுப்பு வெளுப்பு சிவப்பு நிறமுள்ளக்
காளைகளைக்கட்டிப் பூட்டி-பொற்
*காறுவொன்றதிலே மாட்டி
ஏ ரோட்டி. (பத்தி)

கந்தன்கறுப்பன்கடம்ப னிடும்பன்
கரியனவன் தம்பி பெரியன்-சின்னக்
காத்தானவன்மகன் சொறியன்
குள்ள நரியன் (பத்தி)

சீரகச்சம்பா சிறுகருடன் சம்பா
சிறந்தமணக்கத்தை நட்டு-கம்பு
சேரத்துவரையு மிட்டு
பயி ரிட்டு (பத்தி)

* காறு—கொழு.

வசனம்

இவ்விதமாய் ஏர்த்தொழில் புரிந்துகொண்டிருந்த நந்தனார் இனிமேல் சிதம்பரம் போவேன் போகாவிடில் பிராணனைவிடுவேன் என்று சொல்லி வேதியர்பால் சென்று தலை வணங்கிக் கரங்குவித்து மனந்துடித்துச் சிதம்பரம்போக உத்தாரம் கேட்கிறார்.

கண்ணி-இராகம்-பியாகு-ஆதிதாளம்.

மார்கழிமாதத்திருவாதிரைநாள் வரப்போகுதையே
மனத்தைப்புண்ணாகப்பண்ணமலோர்தாம்போய் வாவென்றுசொல்
[லையே
கட்டையிருக்கையில்சிதம்பரம்போய்நான் காணவேணுமையே
கசடனாகிலுமாசைவிளையுதுன் காலுக்குக்கும்பிடையே
காவில்நகமுளைத்தநாள்முதலாயுமக் கடிமைக்காரனையே
காலபாசத்தில்காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலில்வெள்ளெலும்பாட வோடியுழைத்தேனையே
உண்டதுமுறங்கினதன்றியில்வேறே யொன்றுங்காணேனையே
எட்டுமிரண்டுமறியாதபேதைநா னெளியேனானையே
இன்னந்தாய்வயிற்றிடையனுகாம விடங்காட்டிடுமையே
வெள்ளைவெளுத்திடுந்தண்ணீர்குடித்திடும் வெறியேனானையே
மேதினியினில்நாயினுங்கடையேன்வழி விடவேணுமையே
தானதவங்களொன்றுங்காணாத் தடியேனானையே
தளரவிடவேண்டாமொருகோடி தருமமுண்டுஐயே
அல்லும்பகலுமுங்களாதரவாலே ஆளாகினேனையே
அன்புடனேநல்லகதிபெறுவாயென் றனுப்பவேணுமையே

வசனம்

இப்படிச் சிதம்பரம்போக உத்தாரங் கேட்ட மகானுபாவனை வேதியர் அடிமைக்காரனென்று வேணபடி பேசுவார்.

இராகம்-முகாரி-ஆதிதாளம்.

மாடுதின்னும்புலையா—வுனக்கு—மார்கழித்திருநாளோ
தேடியெடுத்தாயாரிடத்தே போய்த்—தீண்டாதேபோடா
ஆடுதின்னும்புலையா—வுனக்கு—ஆனித்தெரிசனமோ

நாடுசிரிக்கும்வார்த்தைகளன்றோ—நாடாதேபோடா
நண்டுக்குக்கலியாணம்—ஊளை—நரிக்குச்சங்காந்தி
பண்டிக்குப்பூசைதிரு நாளுண்டோ—பறையாநீபோடா
பூசைகள்செய்வாயோ—ஆண்டவன்—பொன்னடிதொழுவாயோ
கூசல்போடாதேபோடா கூழைக்—கும்பிடலாகாதோ
கங்கையிலாடுவையோ—அங்கே—காணிக்கைபோடுவையோ
இங்கிதமறிவேனடிக்கடி வந்து—இரையாதேபோடா
அஞ்செழுத்தோதுவையோ—வுனக்கு—மானந்தத்திருக்கூத்தோ
வஞ்சகவார்த்தைகளைத் தெரியும்—வாராதேபோடா.

இராகம்-அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி

திருட்டுத்தனமாத்திரம்வேண்டாம் - நந்தா - அடாவுனக்கு -
திருட்டுத்தனமாத்திரம்வேண்டாம்.

அநுபல்லவி

முரட்டுத்தனமாய்ப்பேசாதேநீர் மூடா
முன்னும்பின்னுமறியாக்குடி- கேடா
வரட்டுத்தவளைபோல்வா யாடாதே யேடா
வயலைமுழுதுஞ்சீர்ப்படுத்திடப் போடா (திருட்டு)

வசனம்

அடா, வாடா, மூடா, கேளடா, என்னைப்போலொத்த பெரியவர்களாலேகூடத் தேடி அறியப்படாத ஜகதீசனுடைய திவ்விய நாமத்தை, நத்தை யுறிஞ்சும் பறையா, நீ கத்திக்குலைக்கலாமா, இப்படித்

தத்திக் குதிக்கலாமா, வித்தையொன்று மறியாதவ னிங்கே, பத்தி யெண்ணலாமா, நத்தி முத்தி தேடலாமா, சுத்தமான பெரியோர் களிடத்தே சத்தம்போடலாமா, இங்கே நித்தம் நாடலாமா, வியர்த்த மான இந்தசென்மமெடுத்துஞ் சுத்திதேடலாமா, அங்கே புத்தி செல்லலாமா, அடடா, இதுவெல்லாம் விட்டுவிடடா, நாத்தைப் பிடுங்கி நடடா, உன்தொழிலைத்தொடடா, தோல்கட்டிய தடியை யெடடா, யாருந்திருடாமல் பார்த்திருடா, களத்தில்படுடா, காவல் கொடுடா, புல்லறுடா, முரடா, வழிதெரியாக்குருடா, நான் சொல்வது நேரடா, இதடா உன்செய்கையென்று கல்லாலெறிந்து, தடியா லடித்து, வாயால்திட்டி, தேள்போலே கொட்டி, இவனொரு ஆள் போலே நின்றான், அவர் நாள்போகுதே யென்றார்.

நந்தனர் வேதியரைப்பார்த்து வணங்கிச் சொல்லுகிறார்.

தண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி

அடித்ததுபோதுமையே என்னை-அடித்ததுபோதுமையே.

அடித்தாலுமுங்கள்கைவலி	யாதோ
அடிமைவேலைசெய்யுமென்னுடன்	வாதோ
படித்ததெல்லாமென்மனதிற்	படாதோ
பாவியெனக்குமினிமேற்றெரி	யாதோ (அடித்)

நல்லவரேயுங்கள்மனதுப்பிர	காரம்
நடக்காமலிருந்ததுமப	சாரம்
சொல்லத்தெரியுமோவெனக்குப	சாரம்
சுகிர்தசாலியுங்களாலேயிந்	நேரம் (அடித்)

மோகனராகம்-ரூபகதாளம்.

இலவுகாத்தகிள்ளை	யாச்சே-நான்
எடுத்துச்சொன்னதெல்லாம்	போச்சே

பறையன்சொல்லுப்பழு தாச்சே-நீங்கள்
பார்ப்பாரென்பதுமே லாச்சே
ஏழைச்சொல்லம்பல மாச்சே-தெய்வ
மில்லாமலெங்கேயோ போச்சே
சேரியேசொர்க்கமென் ருச்சே-தில்லைச்
சிதம்பரமென்பது போச்சே
விழலுக்கிறைத்தாற்போ லாச்சே-என்தன்
வேண்டுதல்வீணாகிப் போச்சே
கண்டதைக்கண்டிட லாச்சே-நல்ல
காலம்பிறக்காமற் போச்சே.

வசனம்

நந்தனர் திரும்பிச் சென்று ஒரு சோலையிலிருந்து தன்னுடைய துயரங்களையெல்லாம் அம்பலவாணருக்கே ஒப்புவித்துச் சனுகை கொண்டாடுவார்.

இராகம்-எதுகுலகாம்போதி-திரிபுடைதாளம்.

பல்லவி

ஐயோதெய்வமே யிந்தவையர்க்கடிமையானேன்
செய்யாவினைகள்செய்தல்லவோ
உள்ளங்கரைந்துருகியுய்யும்படிக்கேட்கில்
கள்ளக்குமானல்லவோ
ஆலைக்கரும்பதுபோலாச்சு தங்கமுழுதும்
வேலைக்கிடமுமில்லையே
பாவியெனக்கோவந்த பார்ப்பான்மனதிரங்கான்
ஆவிதவிக்குதல்லவோ
கோவில்கும்பத்தைக்கண்டால்கோடிவினைகள் தீரும்
பாவிக்குக்கிடையாதுகாண்
தில்லையம்பலவாணதெய்வம்புலையர்க்காக
கல்லாச்சமையலாச்சுதே

பொன்னம்பலவாவுன்னைப்போற்றும்வகையில்லாமல்
இன்னம்பிறவியேறுமோ
அன்னைதந்தையும்நீயென்னுவிபொருளும்நீயுன்
சந்நிதிவரச்செய்வாயே.

இராகம்-லாவணி-யமுனகல்யாணி.

பல்லவி

செய்யுமுபாயமறியேனறியேன்
அரகரசிவனேதில்லைச்சிவனே.

பத்துவருடகாலமாகவந்துபார்ப்பானைக்கேட்டேன்
சித்தமிரங்கிப்போய்வாவென்றொருநல்ல சேதிசொல்லக்காணேனையோ
(செய்யு)

பாவிப்புலையனாய்ப்பிறப்பேனோ இந்தப் பாரினிலிருப்பேனோ
ஆவிதவிக்குதேபொன்னம்பலவாவுன் அடிக்கமலங்காணேனையோ
(செய்யு)

பல்லுமுளைத்தநாள்முதலாகஇந்தப்பாடுபடுவேனோ
தில்லைநாயகா அனகாவென்றுனைத்தேடும்வகைகாணேனையோ (செய்யு)

நாற்பதுவேலிநிலமிருக்கிறதைநடவேணுமென்றார்
காப்பதாருகளைபிடுங்குவதாரென்றுகடுத்தபேச்சுக்கடியேன் (செய்யு)

ஆற்றிலேகுளத்திலேவிழுவேனென்னுவதைப் பிடித்திழுத்திடுவேன்
பார்த்தினிக்கிருபைசெய்யா விடிற்பறையன்பழிவீண் போகாது
[சொன்னேன் (செய்யு)

தில்லைச்சிதம்பரத்தைக்காணுவிடிலென்தேகந்தரியாது
சொல்லிவிட்டேன்பொன் னம்பலவாவுன் சொர்ணசபைக்குவருவே
[னோநான் (செய்யு)

வசனம்

நந்தனார் இப்படி மனதுருகி வாடும் வேளையில் கொஞ்சம் நித்திரைபோறக்கண்டு அந்நித்திரையில் அம்பலத்தேவன் வந்து சொல்லுவார்.

இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி

கனவினில்கண்டாரே - நந்தனார் - கனவினில்கண்டாரே.

அநுபல்லவி

மனதிலெப்போதும் வருந்தியடிபணியுங்
கனகசபேசனைக் கண்ணினாற்காணமல் (கனவி)

சரணம்

நீநடுங்கழனிகள் நானடச்சொன்னேன்
ஊனமில்லாமலுன் னுடையவன்களிக்க
மானிடப்பிறவியி லுனக்கிணையார்பக்தி
மானில்லையெனக்கில்லை நாதன்வந்துரைக்க (கனவி)

கங்குல்பகலாய்க் களித்ததுநீ அன்பால்
சங்கரனேயென்று சாருநன்னிலையால்
அங்கம்புளகித மாச்சுது அதனால்
இங்கேவந்தேனென்று ஈசனும்புகல (கனவி)

வசனம்

நந்தனார் நித்திரை நீங்கி வயல்களைக்கண்டு சந்தோஷமடைகிறார்.

களையெடாமல் சலம்விடாமல் கதிரொருமுழங்காணுமாம்
களிக்குதுபயிரிருக்குது அதைக் கட்டுக்கட்டவேதோணுமாம்
பழுதிலாமலேரிகுளங்கள் பள்ளமேடுதண்ணியாம்

பரமசிவனைப்பணியும்நந்தன் பயிரிடுந்திருப்பண்ணையாம்
கனவில்வந்துவுருவமாகி கருணைமாரிகண்டவன்
கடுகிநடந்துவேதியரிடங் காணவென்றுசென்றனன்

வேதியர் சொல்லுதல்

இராகம்-வராளி-ஆதிதாளம்.

பல்லவி

நந்தாவுனக்கிந்தமதி வந்ததென்னதந்தாரு

அநுபல்லவி

அந்தரங்கஞ்சொந்தமா யிருந்ததுமறந்துபோய்
விந்தையாய்நினைந்ததன்றோ அந்தவேளைபுத்தியில்லை

சரணம்

தோடி

சித்தமுந்தெளிந்ததா உற்றதுவுணர்ந்துதா
பத்தியுந்தொலைந்துதா கத்தலும்பறந்துதா

மத்தியமாவதி

ஊனுறக்கமேயின்பம் ஊணிழந்தாலே துன்பம்
சாண்வயிற்றுக்குஅன்பு சாதிமுறைமைவம்பு

புன்னாகவராளி

இல்லையென்பதுகாட்டிலுண்டு கேட்டதில்லையா
தேகம்பட்டால்புண்ணாகும் பார்த்ததில்லையா
அம்பலமார்வந்துஆகாச முற்றுப்பாரு
அருளில்லைபொருளில்லை கண்டுதேறு

பத்தியென்றுஞ்சித்தியென்றும் வெற்றியென்றும்முத்தியென்றும்
இத்தனைநாள்கற்றகலை அத்தனையும்பித்தமாச்சு
மாறுபாட்டுக்காரன்வார்த்தை கூறுபடுமோ
தாறுமாறுபேசினதால் சோறுபோடுமோ

நாதநாமக்கிரியை

காரியத்தைப்பாரடா உனக்கிணையாரடா
காசுபணஞ்சேரடா இதுநல்லவூரடா

மத்தியமாவதி

சம்பாநெல்லிருக்குனக்குத்தாரேன் ஒற்றைச்
சல்லாக்கிழித்துனக்குத்தாரேன் ஒற்றைக்
கண்டாங்கிச்சேலையொன்று துண்டாய்க்கிடக்குதுன்றன்
பெண்டாட்டிக்குக்கொடுத்து நன்ருகவாழ்ந்திரு (நந்தா)

வசனம்

இப்படிச்சொல்லும் வேதியரைப் பண்ணையைப் பார்க்கவாரு மென்று நந்தனுர் கூப்பிட்டார்.

கேவலமாகிய நீசன், சிவகணங்களாலே ஒரு இராத்திரியில் நடவு நட்டு அறுப்பறுக்கும் வயலை வேதியர்கண்டு ஒன்றுந்தோன்ருதவராகி உலகவாசனையற்று நின்ருர்.

நந்தனுரைப் பார்த்து சிவபத்தரை அபசாரம்பண்ணினேனென்று மிகவும் குழைந்து சொல்லுவார்.

இராகம்-பியாகடை.-அடதாளச்சாப்பு.

பல்லவி

நந்தனுரேயுன்றன் பெருமையின்றுகண்டேன்
நானென்வினையை விண்டேன்,

அனுபல்லவி

விந்தையைக்குறியாமல் விழலனறியாமல்
வீம்புக்குக்கச்சுகட்டி வீசினையென்னையாளும் (நந்தா)

இராகம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

குத்தமெத்தனைசெய்தபோதிலுமுந்தன் சித்தத்தில்நினையாதே-சிவ
பத்தனென்றறியாமல் பதறிவார்த்தைகள்சொன்னபாவந்தொலையாதே
புலையர்கள் பரகதிகேடும்படியவர் புண்ணியஞ்செய்வாரோ - உன்னை
கலிதீரக்கண்ணாரக்கண்டபேர்களெல்லாங்காட்சி பெறுவாரோ
உருவமனதறியவொருவனலாகாதென்றுலகம்மொழியாதோ - அது
திறமாச்சுதினியுந்தன்ஜென்மசபலமாச்சுதெய்வமுமிரங்காதோ [போ,
சாதியிலிழிகுலஞ்சாஸ்திரங் கிடையாதுசந்தேகப்படலானேன்-இப்
ஆதிசிதம்பர ரகசியம்பாரென்று அனுப்பிவிடலானேன்.

இராகம்-ஆனந்தக்களிப்பு.

நந்தாநீசிவ பத்தன் - உன்னை
நம்பாமலேமோசமானேனான் பித்தன் (நந்தா)

வசனம்

இப்படி வேதியர்சொல்லும்போது, நந்தனார் மனம்நொந்து கை கால்நடுங்கி ஐயரைச்சுற்றிவந்து தலைவணங்கி எனக்கு அன்னங் கொடுத்து ஆடையளித்து இத்தனைநாளுங் காப்பாற்றின பெரியவரே, உங்களுக்கடிமைவேலை செய்யுமென்னை இப்படிப் பெருமையாய்ச் சொல்லவேண்டாமென்று சொல்லுகின்றார்.

இராகம்-அமிர்தகலியாணி.

பல்லவி

சின்னச்சாதியல்லவோ சிதம்பரம்போய்வருகிறேனான் (சின்ன)
அன்னை தந்தையொருவரில்லை யடைக்கலமென்னையாளவேணும் (சி)
ஈரமில்லாதநெஞ்சமாகி யிறைச்சிதின்றுஉடல்பெருத்த (சின்ன)
அல்லும்பகலுமதுவைவாயுண்டு யறிவுமயங்கியாட்டங்கொள்ளும் (சி)

வசனம்

இப்படிச் செல்லிய நந்தனைப் பார்த்து வேதியர் சொல்கின்றார்.

இராகம்-பைரவி-திரிபுடைதாளம்.

பல்லவி

ஆருக்குப்பொன்னம்பலன் கிருபையிருக்குதோ
அவனேபெரியவனும்.

அநுபல்லவி

பாருக்குள் வீடுகள் மாடுக ளாடுகள்
பணமிருந்தாலவன் பெரியவனவனோ. (ஆருக்குப்)

வசனம்

சிவபத்தியுள்ளவன் பெரியசாதி, சிவபத்தியில்லாதவன் பார்ப்பானயிருந்தாலுஞ் சின்னச்சாதி. ஆனபடியினலே, திருப்புன்கூரி லுனக்காகப் பரமசிவன் நந்தியைவிலக்கித் தெரிசனங்கொடுத்ததும், நீ குளம்வெட்டினதும், ஒரு ராத்திரிகாலத்திலே நாற்பதுவேலிநிலமும் நடராஜமூர்த்தியேவந்து நடவுநட்டதும் பார்க்கும்போது நீயே மகா புண்ணியபுருஷனென்று சொல்லவேண்டுமே யல்லாது வேறில்லை. நீ இதுவரையி லெனது வார்த்தையைத் தட்டினது மில்லை. ஆகையால் எனக்கு நீ குருவாகி நின்று உபதேசம் பண்ணென்று வேதியர் சொல்லுகின்றார்.

வேதியர் வார்த்தையைத் தள்ளப்படாமையால் சுற்றிவந்து தலைவணங்கி ஒரு மூலையை நோக்கி நந்தனர் சொன்னதை வேதியர் கேட்டு திவ்யஞானமடைந்து நந்தனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

இராகம்-சாமாராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்

சிதம்பரம்போய்நீர்வாருமையா நான்
செய்தகெல்லாமபசாரமையா (சிதம்பரம்)
சிதம்பரம்போவீர்பதம்பெறுவீர் வேறே
சிந்தனைவேண்டாம்நந்தனேயினிமேல் (சிதம்பரம்)
எத்திசையிலுமுமக்கிணைசொல்லப் போமோ
பத்தியேமுதலென்றுபழகியபெரியவர் (சிதம்பரம்)
சித்தமுந்தெளிந்ததுதெய்வமேநீ யென்று
புத்தியும்வந்ததுசத்தியமல்லவோ (சிதம்பரம்)

ஓரடியிலிரண்டுவார்த்தை-துக்கடா.

நந்தனுர்.	வேதியர்.
சிதம்பரதெரிசனங்கிடைக்குமோ	கிடைக்கும்
சென்மசாபல்லியமாமோ	ஆகும்
பதம்பெறுந்தவநெறியறிகிலேன்	அறிவீர்
பரமசிவனருள்செய்வரோ	செய்வார்
சாதியில்தாழ்ந்தவனல்லவோ	அல்ல
சாத்திரமுறைமைக்குஞாயமோ	ஞாயம்
ஆதியம்பலத்தெய்வம்நாடுமோ	நாடும்
ஆனந்தமடைவேனோஐயரே	அடைவீர்.

வசனம்.

நந்தனுர் ஆதனூரை விட்டுச் சிதம்பரத்தை நோக்கி வருகின்றார்.

இராகம்-லாவணி-ஆதிதாளம்.

நந்தன்சிதம்பரம்வருகின்றார்-ஆதனூரைவிட்டுக்
கொள்ளிடந்தாண்டி யப்பால்வருகையிலே
தொண்டரங்கம்பரவசமாய்-எங்கும்பொங்கிச்சிவமயமாய் (நந்த)

குதிப்பாரொருதரங்களிப்பார்கண்ணீ
ருதிர்ப்பாரானந்தலாகிரியால்
கொண்டானடிப்பாரே-குரவை நன்ருய்ப்படிப்பாரே (நந்த)

இராகம்-முகாரி-அடதாளம்.

பல்லவி

கொள்ளிடக்கரைபோனன் - நந்தன்
கோபுரங்களைக்கண்டான்.

அநுபல்லவி

பள்ளச்சாதியிலும்பறைச்சாதிநானென்று
உள்ளமுருகியவர்வெள்ளங்கரைபுரள (கொள்)

சரணங்கள்

ஓடத்தின்மேலேறி-நந்தன்-ஓங்குமகிழ்ச்சிமீறி
நாடஎவரும்நல்லநடனக்கூத்தாடியே
நண்புடன்கதிபெறலாமென்றுறுதிகொண்டு (கொள்)

அக்கரைபோனனே-நந்தன்-ஆனந்தங்கொண்டானே
சிக்கெனவேசிவசிதம்பரேசனைக்காணச்
சிந்தைமகிழ்ந்துசிவத்தியானஞ்செய்துகொண்டு (கொள்)

திருவாதிரைத்திருநாள்-செய்யுந்-தினமல்லவோஇந்நாள்
திருநடராஜமூர்த்தி திருமுகந்தனைக்கண்டு
சித்தங்களிப்பேனென்றுறுதிகொண்டு (கொள்)

இராகம்-தெண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி

கோபுரதெரிசனமே-என்தன்-பாபவிமோசனமே
தாபங்கள்மூன்றுந்தணிந்துவிடும்நல்ல
சோபனமுண்டாஞ்சோதிவிளங்கிய (கோபுர)

விண்ணணைந்துமேலோங்கியேகண்டுநற்
கண்ணுளார்க்கெல்லாங்காட்சியளித்திடும் (கோபுர)

அல்லும்பகலும்அமரர் துதித்திடும்
தில்லைக்கிறையோன்றினமுமகிழ்ந்திடும் (கோபுர)

இராகம்-கரகரப்பிரியை-ரூபகதாளம்.

கெண்டாமணியாடுது-கண்டுபிணிவாடுது

முத்திமணிதேடுது நாடுதுகூடுது (கெண்டா)
பரவசமாகுது பாவங்கள்போகுது (கெண்டா)
செனனமாறுதிகள் மோகமுந்தீர்ந்தது (கெண்டா)

இராகம்-தெண்டகம்-ஆதிதாளம்.

தில்லைத்தலத்தைக் கண்டார் - அதுசித்துவிலாசமென்றார்-அந்த
எல்லையிலே நின்றார் - மனதேகமாக்கிக்கொண்டார்
இருகண்கள்நீர் வடித்தார் - கொடுங்காமவல்லையைய றுத்தார்
இருகையைத்தூக்கிக்குவித்தார்-தன்காலைக்கோணிக்குதித்தார்-இந்த
ஐம்புலன்களை மறந்தார் - பரமானந்தக்கடலுறைந்தார்
தன்தேகபாவ மறந்தார் - தில்லைச்சிவனேயென்றிருந்தார்.

இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி

இதுதானோதில்லைத்தலம்-இத்தனைநாளுமறியேன்
இதுதானோதில்லைத்தலம்.

அதுவோஇதுவோவென் றலைந்திடும்பேயனைக்
கதிதருவேனென்றுகைகாட்டியழைத்திடும் (இது)

காசினியிலிதைக் கயிலையென்றெல்லோரும்
பேசக்கேட்டதேயன்றி பேணிப்பார்த்தறிந்திலேன். (இது)

வசனம்

நந்தனார், இந்தத் தில்லைவாழந்தணர்களுடைய வீடுகள் இத்தன்மையாயிருக்க, எனக்கு அவ்விடத்திற்குப்போகுதல்.கூடாதெனப் பயந்து அந்தத்தலத்தின் மதிலின்புறத்திலிருந்து அளவற்ற பேரன்புடன் மனமுருகிக் கும்பிட்டுக்கொண்டு சொல்லுதற்கரிய எல்லைவலஞ் செய்கின்றார்.

இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி

கொண்டாடினடித்தாரே—நந்தனார்
கோவிலைக்கண்டு தாவித்தாவிக் (கொண்)

அநுபல்லவி

அண்டாமகிழ்ச்சியாலே—அரனேயென்றுமென்மேலே (கொண்)

வசனம்

இப்படி நந்தனார் வீதியைச்சுற்றிச் சந்நிதிமுன்வந்து தண்டாகாரமாய் விழுந்து பணிந்து புழுதிபடப்புரண்டு ஆனந்தமடைந்து நிருத்தசபைதெரிந்து தெரிசனம் பண்ணுவார். இப்படி அநேக விதமாய்க் கொண்டாடி, உட்புகுந்து தாண்டவம் பாராதமனக்குறை கொண்டு சுவாமியைக் கேட்கின்றார்.

இராகம்-மாஞ்சை-ரூபகதாளம்.

பல்லவி

வருகலாமோவையா—உன்தன்
அருகில்நின்று கொண்டாடவும் பாடவும் நான். (வருக)

அநுபல்லவி

பரமகிருபாநிதியல்லவோ—யிந்தப்
பறையனுபசாரஞ் சொல்லவோ—உன்தன்
பரமாநந்தத்தாண்டவம்பார்க்கவே நானங்கே (வருக)

சரணம்

பூமியில்புலையனாய்ப்பிறந் தேனே—நான்
புண்ணியஞ்செய்யாமலிருந் தேனே
சாமியுன்சந்நிதிவந் தேனே—பவ
சாகரத்தையுமிழுந் தேனே
கரைகடந்தேனேசரணமடைந் தேனே - தில்லை
வரதாஎன் தாபமும் பாபமுந்தீரவே நானங்கே (வருக)

இராகம்-சந்தக்கடுக்கா-தெண்டகம்-ஆதிதாளம்.

ஆகமங்கள் பலவேதியர்கள் சிவனடியார்கள் கூட்டம் - மன
தேகமாகியெப்போதும்விளைகின்றயோகிமுனிக ளாட்டம் - பூ
லோகமிதுகைலாசமென்றுமிதைப்போற்றுவார்க ளாட்டம் - அதி
வேகமாகவெங்கேயாகினும்வெளியேபோகவேணு மையே
இங்கிருக்கலாகாதையே இங்கிருக்கலாகா தையே
பாவிப்பறையனிங்கேவரலாமோ
சுவாமிதரிசனந் தரலாமோ
பாத கமலங்களைத்தொடப் போமோ
பாவமெனைப்பிரிந்துதொலை போமோ
இங்கே ஆகாதாகா தையே
வேள்விசெய்யும்புகைமேலுலகெழும்பிப்போகு தையே
புண்ணியவான்கள் புரியுந்தவமுடன்
அரகரசிவனென்று ஆடிப்பாடிக்கொண்டு
பரிவுடன்றனைப்பிரதட்சணம்வருமிடம்
ஆகாதாகா தையே
மணியாடுதுவெகுசனங்கூடுது வீதிவலமாகுது திருப்பதம்பாடுது
உள்ளேநடமாடுது பணிவிடைபோகுது
பரவசமாகுது மெத்தப்பயமாகுது
இங்கே ஆகாதாகா தையே
தீண்டாதேஇங்கேவேண்டாதே சும்மாஇரையாதே இங்கேதரியாதே
என்னைப்பாராதே படியேறாதே
உள்ளேபோகாதே வாலாகாதே யென்பார்
ஆகாதாகா தையே

சிந்து

பெரியோரிருக்குமிடம்-இந்தப்-பேயனிருப்பதுஞாயமல்ல
நானோபறைச்சாதி-தில்லை-நாதன்றெரிசனமாதரவாய்ப்
பண்ணுப்படுபாவி-இந்தப்-பாரிலிருப்பதுசீரலவே
என்றேகுளத்தோரம்-புக்கு-எங்கிநின்றார் துயர்நீங்கிநின்றார்
ஓயாப்பெருங்கவலை-கொண்டு-உள்ளங்குலழுந்திடவெள்ளமெனக்
கண்ணீர்கரைபுரள-இரு-கைதொழுதாரவர் மெய்தொழுதார்
கீழேபுரண்டழுதார்.

வசனம்

நந்தனார், தனக்குத் தெரிசனம் கொடுக்க அம்பலவாணர் வருவாரோ, வாராரோ வென்று சஞ்சலப்படுவார்.

இராகம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி

வாராமலிருப்பாரோ—ஒருகால்—வருவாரோவறியேன்
பாராமலிருப்பேனோ பதஞ்சலிமுனிக்குப்பொற்
பாதங்கொடுத்தபரமேசுவரனானென்று (வாராம)

கனவினில்வந்துகழனிமுழுதும்நட்டு
மனதுமகிழ்ந்துஎன்னைவாவென்றுசொன்னவர் (வாராம)

கலக்கமறவேயவர்காலுக்குக்கும்பிட்டுக்
குளத்தங்கரையினின்றுகூப்பிடும்வேளையில் (வாராம)

அல்லலறுத்துப்பரமானந்தமேதருந்
தில்லைத்தலத்தைக்கண்டுதெரிசனம்பண்ணியும் (வாராம)

வசனம்

இதுவரையில் வாராதபடியால் இனிமேல் தில்லைத்தலத்தை விடாமற் சுற்றிவந்து தேகத்தைத் தள்ளுவோமென்று நிச்சயம்

பண்ணி, சுவாமி உன்னைச் சரணாகதமென்று நம்பிவந்து துன்பப் படலாமோ சிவனே சிவனேயென்று பெருங்குரலிட்டு, சென்மமே கஷ்டம் அதிலும் புலையனாய்ப்பிறப்பது மிகவும் கஷ்டம் என்று சொல்லுகின்றார்.

இராகம்-கரகரப்பிரியை-ரூபகதாளம்.

பல்லவி

இந்தச்சென்மம் வேண்டாம்—இனி—எந்தஜென்மம்வந்தாலும்வரட்டும் இந்தச்சென்மம்வேண்டாம்.

நந்திநடுவினில்மந்திரங்கள்சொல்லி
வந்தனைகள்செய்துசிந்தைமகிழாத (இந்த)

வேதமறிந்தவர்பாதம்பணிந்தவர்
போதமடைந்திடாத்தீதடைந்தேன்பாவி (இந்த)

பாவிப்பறையாநீ தூரவிலகென்று
ஆவிதவித்திடப்பாரிலுரைத்திடும் (இந்த)

இராகம்-ஆகிரி-ரூபகதாளம்.

பல்லவி

தில்லைவலஞ்சுற்றினார்—சிதம்பரத்—தெல்லைவலஞ்சுற்றினார்.

அநுபல்லவி

தில்லைவலஞ்சுற்றினார் தேவருமறியாத
எல்லைவாசல்கடந்துள்ளிருளறவேண்டி. (தில்லை)

சரணங்கள்

சாதிக்குறையைத்தானேசந்ததமுநினைந்து
வேதனைகொண்டுள்ளம்வெதும்பியேவாடி

பாதிப்பிறையணியும்பரமசிவனைக்கண்டு
போதமடைந்துபரிபூரணமாகத் (தில்லை)

வசனம்

இப்படித் தில்லைத்தலத்தை விடாமல் சுற்றிவந்தால் தன்னிடம் சுவாமி வருவாரென்று மனதைப் பார்த்துச் சொல்லுகின்றார்.

இராகம்-யமுனகலியாணி-ஆதிதாளம்.

பல்லவி

வருவார்வருவார்மனமேநீமயங்காதிருசொன்னேன்சொன்னேன்.
வேணுது தருவார்கருணைபுரிவார்தில்லைத்திருவம்பலவர்
பாகதியுந்தருவார்சாதிபறையனென்றுபாரார்நீயந்த
உறுதிகொள்ளவேணும்மெய்யன்புடனே
ஆகாவென்றொருதரஞ்சொன்னாலும்போதும் (வருவார்)

வசனம்

நந்தனர்; இவ்வளவுசொல்லியும் சுவாமி இரங்காமல் போக வேண்டியதென்னவென்று சொல்லுகின்றார்.

இராகம்-பியாகு-ரூபகதாளம்.

பல்லவி

இரக்கம்வாராமற் போனதென்ன காரணம்.

அநுபல்லவி

கருணைக்கடலென்றுன்னைக் காதில்கேட்டுநம்பிவந்தேன் (இரக்கம்)

சரணங்கள்

ஆலமருந்தியண்டருயிரையாதரித்தவுன்கீர்த்தி
பாலகிருஷ்ணன்பாடித்தினமும்பணிந்திடும்நடராஜமூர்த்தி

பழியெத்தனைநான்செய்கினும்பாவித்திடுஞ்சிதம்பரமென்று
மொழிகற்றவர்வழிபெற்றவர்கனகசபாபதியின்னும் (இரக்கம்)

வசனம்

இப்படி நந்தனார், இரவுபகலோயாமல் தில்லைத்தலத்தைச் சுற்றி வருவதால் தேகவருத்தமடைந்து வருத்தத்தினால் மயங்கிச்சாய்ந்து நித்திரையடைந்தார். அந்த நித்திரையிலே நடராஜமூர்த்தி வந்து காட்சிதந்து சொல்லுவார். எம்தன்பிறந்த நந்தனாரே, உம்மிடத்தில் நமது பத்தர்களாகிய வேதியர்களை வரச்சொல்லுவோம், அவர்கள் முன்பாக நீர் அக்கினிப்பிரவேசமாகியெழுந்து வேதியர்களுடனே சபாப்பிரவேசம் பண்ணுமென்று உரைபகர்ந்து ஐயன் அந்தரத் தானமானார். நந்தனார் கனவில் காட்சியானதைக் கண்டுகளித்து விழித்தெழுந்து அளவில்லாத சந்தோஷங்கொண்டு நன்றியறிந்து சுவாமியைத் தோத்திரம்புரிந்து சொல்லுகின்றார்.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி

சொப்பனங்கண்டுகொண்டேன்—அதிசய
சொப்பனங்கண்டுகொண்டேன்.

சொப்பனங்கண்டுகொண்டேன் எல்லாங்கற்பனையென்றறிந்தேன் வேத
தற்பதவாக்கியமேயுருவாகியவற்புதநடனம்புரியஇன்று (சொப்)

அம்பிகைமணவாளன் மான்மழு வணிந்திடுஞ்செந்தோளன்-செம்
பொன்னம்பலந்தனிலாட மத்தளம்போட மறைபாடக் கொண்டாட
(சொப்)

வசனம்

நந்தனார், தான் கண்டகனவு நிஜமோ பொய்யோவென்று சந்தேகப்படுவார்.

இராகம்-சூரியகாந்தம்-சாப்புதாளம்.

பல்லவி

கனவோநினைவோ கண்டதுவீணே
மனதிலுறுதிகொள்ளவழியொன்றுங்காணேன் (கனவோ)
நித்திரைதனிலொருசித்தனுருவாய்வந்து
முத்திதருவேனென்று நத்திப்பேசினதுண்டு (கனவோ)
ஆருமிகழ்ந்துதள்ளும் நாறும்புலையனென்னை
வாரும்பரமபதஞ் சேருமென்றழைத்தது (கனவோ)
கிட்டநெருங்கிவந்து தட்டியெழுப்பியொரு
வெட்டவெளியைக்காட்டிக்கட்டளையிட்டது (கனவோ)

வசனம்

நந்தனார் கனவிலேவந்து சொல்லிய நடராஜமூர்த்தி தில்லை மூவாயிரம்பேர்கள் கனவிலேசொல்லுவார் :—பக்தர்களே ! எனக்கு மிகவும் பிரியமுள்ள ஒரு தொண்டர் திருநாளைப்போவாரென்னும் நாமத்தைக்கொண்டு என்னைக்காணவேண்டுமென்று தன்னைக் காணிக்கைகொண்டு சாதியிற்றாழ்ந்தவனென்று பயந்துகொண்டு என்னைத் தவிர மற்றதெல்லாம் அநித்தியமென்று பத்தி பண்ணிக்கொண்டு முத்தியடையவேண்டுமென்று தில்லையைச் சுற்றிக்கொண்டு தெற்குக் குளத்தங்கரையில் நின்றுகொண்டு இருக்கிறார். அவரை என்னைப் போல் நினைத்து நீங்களெல்லோரும்போய் அவரை அக்கினியில் மூழ்கச்செய்து அழைத்து வாருங்களென்றுசொல்லிச். சுவாமி மறைந்தார்.

விருத்தம்

தம்பெருமான் பணிகேட்ட தவமறையோரெல்லாரு
மம்பலவர்திருவாயின்முன் பட்சமுடனெய்தி
யெம்பெருமானருள்செய்த பணிசெய்வோமென்றேத்தித்
தம்பரிவுபெருகவருந்திருத்தொண்டர்பாற்சார்ந்தார்..

இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி

தேடித்தேடித்திரிந்தார் பாரும்-நந்தனார் தம்மைத்
தில்லைமூவாயிரவர் யாரும்

அநுபல்லவி

நாடுஞ்சதுர்வேதப்பிர காசனை
நங்கைசிவகாமிப்பிரா ணேசனை
ஆடும்பதநடன சபேசனை
ஆவலாகத்தொழுவோர்க்கருள் நேசனைத் (தேடி)

வசனம்

இவ்விதமாகச் சுவாமியைத்துதித்துத் தில்லை மூவாயிரவர்களனைவரும் நந்தனாரைத்தேடி யனுத்துவரும் மார்க்கத்தில், ஒதுங்குற நின்றுகொண்டிருந்த நந்தனார் வேதியர்களைக்கண்டு தூரவிலகிநின்று தலைவணங்கிச் சொல்லுகின்றார்.

இராகம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி

கிட்டநெருங்கிவரவேண்டாஞ் சுவாமிகாள் - காதில்
கேட்டபேர்க்குப்பாவம்வருமெனதுசென்மம் (கிட்ட)

சிட்டர்புகழுந்தில்லைதன்னில் செழித்துவாழும்வேதியர்கள்
இஷ்டமிதுவல்லவேயென்றுசொல்லவேணுமோ புலையன் (கிட்ட)

உலகினில்கடைச்சாதியென்றனுக்குவமையாருமில்லையே
பலவிததுஷ்கருமஞ்செய்துபாரில்வந்த புலையனேயே (கிட்ட)

வேலைசெய்துஉடம்புவளர்க்கவேணுமிந்தநாயடியேன்
தோலுமெலும்புமுதுகில்சுமந்துஅலையும் புலையனேயே(கிட்ட)

செத்தமாடிழுப்பதெனத்துசேவகம்பரம்படித்துமெல்லை
சுற்றிவந்துகழுக்கடித்தும்சுடலைகாக்கும் புலையனையே(கிட்ட)

வசனம்

இப்படி வணங்கிச்சொல்லிய திருநாளைப்போவாராகிய நந்தனாரைப் பார்த்து வேதியர்கள் சொல்லுகின்றார்கள்.

இராகம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி

சாதியிலுயர்ந்தாலென்ன-இந்தப்-பேரும்பெருமையுமில்லையே.

சாதிபெருமைகொண்டதாலே சங்கரனருகில்வந்து
ஆதரவுடன்வரங்களீந்து அழைப்பாரோ சேர்ப்பாரோ
அளிபெருகவேயீசன்கழலையறிவிலுன்னி யடிபணிந்து
தெளிந்திடாதபேரைமுத்திதேடுமோநாடுமோகூடுமோ (சாதியி)

வசனம்

நந்தனார், தான் சின்னச்சாதியாயிருந்தபோதிலும் தெய்வமிரங்கிற்றேயென்று சந்தோஷங்கொண்டு சொல்லுகின்றார்.

இராகம்-தனாசரி-ஆதிதாளம்.

எனக்குமிரங்கிற்றே-நான்மெத்த- ஏழைச்சாதியல்லவோ.
தனக்குள்தானுயிருந்தகிலப்பிரபஞ்சமுந்
தன்னுள்ளடக்கியபொன்னம்பலவன்கிருபை (எனக்கு)

அல்லும்பகலுமருந்தவஞ்செய்கினு
மறியாரொருவருமம்பலத்தெய்வம் (எனக்கு)

நான்மறைமுடியும்நானறியேனென்று
வோதியவுண்மையையுலகமறிய (எனக்கு)

வசனம்

நந்தனார், இப்படிப் பிராமணர்கள் சொல்லியபின்பு தென்திசையிலுள்ள மதிலின்புறத்திலே சந்திரனைத் தவழ்ந்துபோகும் உயர்ந்திருக்குந் திருக்கோபுரவாயிலுக்கு முன்னே சுவாமியின் நிறைந்த கிருபையோடுகூடிய கட்டளையால் வளர்த்திருக்கின்ற நெருப்பின் குழியை அடைந்து நடேசருடைய திருப்பாதத்தை மனதில் தியானித்து அக்கினியைச்சுற்றி வலமாகவந்து, அதில் புகுந்து எழுந்தபொழுது செந்தாமரைப்புட்பத்தின்மேல் உதயமாயெழுந்தருளும் பிரமாவைப்போல் பிரகாசித்தார். பெருமைபொருந்திய ஆகாயத்தில் அந்தர துந்துபியின் கோஷமானது உண்டாயிற்று. தேவர்கள் சந்தோஷமாய் ஆரவாரித்து அழகாயிருக்கின்ற கற்பகவிருட்சத்தின் குளிர்ச்சிபொருந்திய மலர்களை வருஷமாகச்சொரிந்தார்கள். ஞானசம்பத்தையுடைய தில்லையில்வாழும் பிராமணர்கள் கைகூப்பினார்கள். பரவுதற்கரிய மற்றைச்சிவபத்தர்களுந் தொழுதுமனதில் களிப்படைந்தார்கள். வேதங்கள் முழங்குகின்ற கனகசபையில் ஆடுகின்ற பாதத்தை வணங்கும்பொருட்டுத் திருநாளைப்போவாராகிய ஒரு வேதமுனிவர் தான்கண்ட ஆனந்தத் தாண்டவத்தை வருணித்துச் சொல்லுகின்றார்.

இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி

தாதெய்தெய்யென்றாடுவார்—அவர்—தத்தித்தெய்யென்றாடுவார்

ஆதிபராபரமாகியசித்து
ஆனந்தங்கொண்டொருகாலையெடுத்துத் (தாதெய்)

அண்டசராசரமெங்கும்நடுங்க
ஆதிசேடனார்முடிகணெருங்கத் (தாதெய்)

சீலம்பெருகியமுனிவர்கொண்டாடத்
திங்களுஞ்சூடியசெஞ்சடையாடத் (தாதெய்)

பார்புகழுந்தில்லைச்சிதம்பரநாதன்
பாலகிருஷ்ணன்பணிந்தேத்தியபாதன் (தாதெய்)

வசனம்

திருநாளைப்போவாராகிய முனிவர் அக்கினியில் குளித்தெழுந்து கனகசபையில்வந்து மனமுருகி ஆனந்தம்பெருகி நமது ஆண்டவராகிய நடேசமூர்த்தியைத் தோத்திரம் செய்கின்றார்.

இராகம்-சாசாங்கி-ஆதிதாளம்.

பல்லவி

உனதுதிருவடிநம்பிவந்தேன்—எனக்
கொருவருமில்லைநானேழை (உனது)

அநுபல்லவி

அனுதினமும் பொன்னம்பலந்தனிலே
ஆடியபாதரே யென்சுவாமி (உனது)

சரணங்கள்

இரவும்பகலும்விஷயாதிகளென்னை யிழுக்குங்கானதை
மரித்துமிப்படிப் பரதவித்திடலானேன்
பார்க்கலாமோபாலகிருஷ்ணன்போற்றும்பரனே
பரமதயாநிதியேநின் பக்தியைத்தந்து
சித்தமகிழ்ந்திடக்கரையேற்றிடுவதுன்பாரஞ்
சொன்னேன்கைவிடவேண்டாம் சரணம்சரணம் (உனது)

வசனம்

திருநாளைப்போவார் நாயனாரென்றும், இடையில் நந்தமாமுனி யென்றும் வழங்குகின்ற நாளைப்போவார் தில்லை மூவாயிரமுனிவர் களோடு பொன்னம்பலத்துக்கு வந்தார். அதற்கப்பா லவரைக்கண்ட பேர்களில்லையென்று பெரியபுராணம் பாடியருளிய சேக்கிழார் சுவாமிகள் சொல்லியிருப்பது. அந்தத் திருநாளைப்போவாரென்னு முனியானவர், புரட்டாசிமாதம் உரோகிணி நட்சத்திரத்தில் கனகசபை யில்வந்து கற்பூரசோதியைப்போற்றோன்றிய சிவசாரூப்பியத்தை யடைந்தாரென்று உபமன்னியுமகரிஷிபண்ணிய பக்தவிலாசத்திலேயும் சொல்லப்பட்டிருக்கின்றது.

மங்களம்.

இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

திருநாளைப்போவாருக்கு ஜயமங்களம்—எங்கள்
தில்லைமூவாயிரவர்க்குச் சுபமங்களம்

சிதம்பரக்கும்மி.

சித்தஞ்சிதம்பரமாச்சுதடிமுன்னே
செய்தவினையெல்லாம்போச்சுதடி
சுத்தப்பிரமமயமாச்சுதடியதைச்
சொல்லத்தெரியுமோ பாருங்கடி.

சாதிபேதங்களற்றேண்டியிந்த
சாஸ்திரமனைத்தையும்விட்டேண்டி
போதமயக்கந்தொலைத்தேண்டியன்பு
பொருந்தக்கும்மியடியுங்கடி.

சென்னை திருவல்லிக்கேணி ஹிந்தி பிரசார் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது.